விலை ரூபா: 7.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 24 ஞாயிற்றுக்கிழமை (10.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 29

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# அரசின் மாற்று யோசனை புலிகளின் தலைமைக்கு!

## நோர்வே மூலம் கையளிக்க ஏற்பாடு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைக்கு மாற்றீடான யோசனை ஒன்றை இலங்கை அரசு நோர்வேயின் மூலமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

ஐக்கிய தேசியக் முன்னணி ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளினால் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து ஐ.தே.க. அரசாங்கம் கலைக்கப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சு வார்த்தை தேக்கநிலை அடைந்தது.

இதனையடுத்து இடம்பெற்ற பாராளு மன்ற பொதுத்தேர்தலில் ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்ற பின் சமாதான முயற்சிகளை மீண்டும் தொடர்வதற்கு அரசு முயற்சி செய்துவந்துள்ளது.

அரசின் இந்த முயற்சிகளின் ஒரு கட்டமாக விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைக்கு மாற்றீடாக அரசாங்கம் தயாரித்து வைத்துள்ள மாற்று யோசனைகள் அடுத்துவரும் வாரங்களில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் மூலம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்க அரசு திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த யோசனைகளை நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் வன்னித் தலைமையகத்துக்கு எடுத்துச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவேளை தேக்கநிலையடைந்துள்ள

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து கருத்துக்கள் வெளியிடக்கூடாது



### அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(நமது நிருபர்)

வெளிநாடுகளுக்கு செல்லும் அமைச்சர்கள் மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்கள் அங்கு இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்த விடயங்கள் தொடர்பான கருத்துக்கள் எதனையும் வெளியிடக்கூடாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டிப்பான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

சமாதான முயற்சி தொடர்பாக இலங்கை அரசு எடுத்துவரும் முன் முயற்சிகளை குழப்பும் வகையில் வெளிநாடு செல்லும் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் கருத்துக்களைத் தெரிவித்து வந்தமையை அடுத்தே ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்துள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்திரிய வெளிவிவகார அதிகாரியுடன் தமிழ்ச்செல்வன் குழுவினர் பேச்சு

(ஆஸ்திரியா)

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் ஆஸ்திரியாவில் அந் நாட்டின் முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தலைநகர் வியன்னாவில் அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான பணிப்பாளர் நாயகம் ஜோர்ச் லென்னை சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பின்போது தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. வெளிவிவகார அமைச்சின் அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான பணிப்பாளர் நாயகம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான அக்கறையை தமிழ்ச்செல்வன் குழுவினரிடம் வெளிப்படுத்தினார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாளில் தலைவர் பிரபாவின் விசேட செய்தி

(கிளிநொச்சி)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் மற்றும் இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 17 ஆம் ஆண்டு நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி மத்திய மைதானத்தில் இன்று இரவு 7மணிக்கு இந் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

மாவீரர்களின் அஞ்சலியினைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் விசேட செய்தி வெளியிடப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழியின் தலைமையில் இந் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் – பொலிஸார் யாழ். நகரில் கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றிரவு பொலிஸாருக்கும் இளைஞர்கள் இருவருக்குமிடையில் கைகலப்பு இடம்பெற்றது. இச் சம்பவத்தையடுத்து பொலிஸார் வான வேட்டுக்களை தீர்த்ததனால் நகரில் பதற்றம் ஏற்பட்டது.

நேற்றிரவு 7.45 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாமல் வந்த இளைஞர்களுக்கும் பொலிஸாருக்குமிடையிலேயே கைகலப்பு ஏற்பட்டதாக தெரியவருகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# புலி உறுப்பினரை சுட்டுவிட்டுத் தப்பிச்செல்ல முயன்ற கருணாகுழு உறுப்பினர் படையினரால் சுட்டுக்கொலை

## மட்டக்களப்பு அக்கரைப்பற்றில் நேற்றுக் காலை சம்பவம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை கருணா குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினரை சுட்டுவிட்டு தப்பிச் சென்ற இருவரையும் துரத்திச் சென்ற விசேட அதிரடிப் படையினர் இவர்களில் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

தப்பிச் சென்ற மற்றைய நபரைத் தேடி கண்டுபிடிக்க அப்பகுதியில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருக்கோயில் செல்வதற்காக அக்கரைப்பற்றில் தனியார் வாகனமொன்றின் முன்னிருக்கையில் அமர்ந்திருந்த விடுதலைப் புலி உறுப்பினரை அவ்விடத்தில் நின்றிருந்த கருணா அணியின் இரு உறுப்பினர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் சம்பவ இடத்திலேயே புலி உறுப்பினர் யூட் என அழைக்கப்படும் பாலசிங்கம் ஜெயகாந்தன் (வயது 30) என்பவர் உயிரிழந்ததுடன், அருகிலிருந்த வாகன சாரதியும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதையடுத்து அப் பிரதேசத்துக்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர் கொலையாளிகள் இருவரையும் அடையாளம் கண்டனர். அதனையடுத்து அவர்களை துரத்திச் சென்ற சமயம் ஒருவர் பதுரியா பள்ளிவாசல் வீதியில் உள்ள வீடொன்றினுள் ஓடி ஒளித்துக் கொண்டார்.

அவ் வீட்டில் தேடுதல் நடத்திய விசேட அதிரடிப் படையினர் கட்டிலுக்குக் கீழ் மறைந்திருந்த கொலையாளி ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர். வித்தகன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

இதனையடுத்து அப் பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்டனர். இருப்பினும் மற்றைய நபர் கைது செய்யப்படவில்லை.

இச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பன் தமது போராளி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு கருணா அணியினரே பொறுப்பு என குற்றஞ்சாட்டியுள்ளார்.

அக்கரைப்பற்று நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களும் பொதுமக்களும் விசேட அதிரடிப்படையினரால் சோதனையிடப்பட்ட பின்பே நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.

அப்படியிருந்தும் மேற்படி சம்பவம் இடம்பெற்றிருப்பது

(14 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடற்தொழிலாளர் - படையினர் சந்திப்பு இணக்கப்பாடுகள் எதுவுமின்றி முடிவு

(திருநெல்வேலி)

வடமராட்சி கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயும் மாநாடு ஒன்று 524 வது படையணித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் 524 ஆவது படையணிக் கட்டளைத் தளபதி கேணல் ரத்னாயக்கா தலைமையில் நடைபெற்றது.

இம் மாநாட்டிற்கு வடமராட்சியில் உள்ள அனைத்துக் கடற்தொழிலாளர் சங்கங்களிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் சில சங்கங்கள் மட்டுமே இதில் கலந்துகொண்டன. இச் சந்திப்பில் கடற்படையினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது வான் தோண்டுவதற்குக் கட்டுப்பாடுகள் இன்றி அனுமதிக்குமாறும், பாஸ் நடைமுறையை ரத்துச் செய்யுமாறும், இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்துமாறும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், இந்திய மீனவர்களின் பிரச்சினை இலங்கை, இந்திய அரசுகளிற்கிடையிலான பிரச்சினை எனவும், ஏனைய கோரிக்கைகளையும் உடனடியாகத் தீர்க்கமுடியாது எனவும் படையினர் தெரிவித்ததால், இம்மாநாடு முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் முடிந்தது.

இதேவேளை, இத்தகைய சந்திப்புக்களில் எதுவித பிரயோசனமும் ஏற்படாததனாலேயே தாங்கள் இவ்வாறான சந்திப்புக்களில் கலந்துகொள்வதில்லை என வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன் பொஸ்கோ தெரிவித்துள்ளார். (ற-43)

# வெளிநாட்டில் உயிரிழக்கும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு விசேட நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு!

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில்புரியும் வேளைகளில் விபத்திற்குள்ளாகும் இலங்கையருக்கு அதிகளவு நஷ்டஈடு வழங்கும் செயற்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படும் எனறு அமைச்சர் அதாவுட சென‌விரத்தின தெரிவித்துள்ளார்.

தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி வெளிநாடுகளில் தொழில்புரியும்போது உயிரிழப்போர், விபத்துக்குள்ளாவோர் மற்றும் நோய்வாய்ப்படுவோருக்கு அதிகளவான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-121)

# திருமலையில் 2 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டுள்ளனர்

திருகோணமலையிலுள்ள அநுராதபுரம் சந்திப் பகுதியில் வைத்து இரண்டு தமிழ் இளைஞர்கள் ஊர்காவல்படையினர், மோட்டார் சைக்கிள் ரோந்து சேவையில் ஈடுபடும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் கடுமையான முறையில் தாக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையில் தமிழ்மக்கள் பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க பூரண கதவடைப்புப் போராட்டம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் பிரஸ்தாப இளைஞர்கள் அவசர தேவையொன்றின் நிமிர்த்தம் அநுராதபுரம் சந்திப்பகுதிக்கு வந்தபோதே இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த இரண்டு தமிழ் இளைஞர்களும் பின்னர் பொலிஸாரினாலும் தாக்கப்பட்டு வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் இளைஞர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டு பொதுமக்களால் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அறிந்த திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்து, இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதை தடுக்கவேண்டும் என்றும், இது போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளார். (ற-08,121)

# பருத்தித்துறை நகரசபையின் செயற்பாடுகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் பொலிஸ் நடைமுறைகள்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை நகரசபையின் திறப்பை தினமும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும், திறக்கும் நேரமும் பூட்டும் நேரமும் பொலிஸ் நிலையத்திற்கு வந்து திறப்பைப் பெறவேண்டும் எனவும் பருத்தித்துறை பொலிஸார் அறிவுறுத்தி உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு உள்ளூராட்சி சபையிலும் இத்தகைய நடைமுறை இல்லாதபோதும் பருத்தித்துறை நகரசபைக்கு மாத்திரம் இத்தகைய நடைமுறை பின்பற்றப்படுகிறது.

காலைவேளையில் அலுவலகத்திற்கு வரும் ஊழியர்கள் தினமும் நீண்டநேரம் வெளியில் காத்துநிற்கவேண்டிய நிலைமை ஏற்படுவதாகவும் நகரசபையின் திறப்பை 524 ஆவது படையணித் தலைமையகத்துக்குள் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதாகவும், திறப்பிற்கு செல்வோர் நீண்டநேரம் காத்திருக்க வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் காலை 10 மணியளவிலேயே திறப்பு ஒப்படைக்கப்படுவதாக தெரியவருகிறது. பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பாக தாம் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாக பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி திருச்செல்வநாயகம் தெரிவித்தார். (ற-43)

## பயிற்சி

(ஊர்காவற்துறை)

சிறுவர் பாதுகாப்பு மேம்பாடு தொடர்பான பயிற்சி ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்துறைப் பிரதேச சிறுவர் நன்நடத்தை, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தரினால் இது நடத்தப்படவுள்ளது. (ப-75)

## நினைவஞ்சலி கூட்டம்

(சாவகச்சேரி)

அமரத்துவம் அடைந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் அ.யோகானந்தாவின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆசிரியர் ந.ரவிக்குமார் தலைமையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்விவலய நலன்புரிக் கழகம் மற்றும் தென்மராட்சி கணித, விஞ்ஞான ஆசிரியர் கழகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (ப-27)

## நிறைவேற்று குழுக்கூட்டம்

தென்மராட்சி மகாசங்க நிறைவேற்றுக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் சமுர்த்தி மகாசங்கக் கட்டடத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

தென்மராட்சி சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் நடவடிக்கையில் அதிருப்தி தெரிவித்து பல அங்கத்தவர்கள் சென்றமாதம் அரச அதிபருக்கு கையளித்த மகஜரின் பின் மகாசங்க நிறைவேற்றுக் குழுக்கூட்டம் கூட்டப்பட முடியாதநிலை காணப்பட்டது.

இந்நிலையைப் போக்கி ஒரு தீர்க்கமான முடிவினைக் காணும்பொருட்டே மேற்படி கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரியவருகிறது. (ப-29)

## விசேட கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சே சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் விசேட கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு சமுர்த்தி வங்கிக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கட்டுப்பாட்டுச்சபை அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி சமுர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் ம.விவேகானந்தன் அறிவித்துள்ளார். (ப-29)

# சிறுவர், முதியோர் தினப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

## சிறுவர் தினப்போட்டி

### கட்டுரை

**கனிஷ்ட பிரிவ் (தரம்6-8)**

1 ஆம் இடம் ச.விதுரன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் சு.வெங்கடேஸ்வரன் (பொலிகண்டி இ.த.க.பாடசாலை), 3 ஆம் இடம் அ.ரம்யா (வல்வை மகளிர் மகா வித்தியாலயம்).

**சிரேஷ்டபிரிவு (தரம்9-11)**

1 ஆம் இடம் ஸ்ரீ.நிமலன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் அ.தனுஸ்கா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), 3 ஆம் இடம் கு.தர்சன் (ஹாட்லிக கல்லூரி).

**சிரேஷ்ட மேற்பிரிவு (தரம் 12-13)**

1 ஆம் இடம் அ.யசிகரன் (வேலாயுதம் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் சி.சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம் இ.ஜெயசுகந்தி (தொண்டமனாறு வீரகத்தி மகா வித்தியாலயம்).

### (கவிதை)

**கனிஷ்ட பிரிவு (தரம்6-8)**

1 ஆம் இடம் ஐ.யோகல்ஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), 2 ஆம் இடம் சி.சிவாஸ்கர் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம் வி.விஜிதா (வட.இந்து மகளிர் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு (தரம்9-11)**

1 ஆம் இடம் ந.அபிராமி (வட.இந்து மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் ச.கார்த்திஜா (மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை), 3 ஆம் இடம் ந.கார்த்திக் (ஹாட்லிக் கல்லூரி).

**சிரேஷ்ட மேற்பிரிவு (தரம்12-13)**

1 ஆம் இடம் பு.மயூரதாஸ் (புற்றளை மகாவித்தியாலயம்), 2 ஆம் இடம் ஜெ.டயானா (வட.இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் செ.செல்வரஞ்சினி (மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை).

## முதியோர்தினப்போட்டி

### கட்டுரை

**கனிஷ்டபிரிவு (தரம் 6-8)**

1 ஆம் இடம் அ.அனுசியா (சென்.தோமஸ் றோ.க.பெ.பாடசாலை), 2 ஆம் இடம் அ.வசந்தகுமாரி (சென்.தோமஸ் றோ.க.பெ.பாடசாலை), 3 ஆம் இடம் பி.யாசினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**சிரேஷ்டபிரிவு (தரம்9-11)**

1 ஆம் இடம் த.தமிழினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம் தி.தாரணி (வட.இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் வை.விதுசிகா (புற்றளை மகா வித்தியாலயம்).

**சிரேஷ்ட மேற்பிரிவு (தரம்12-13)**

1ஆம் இடம் ந.வதனரேகா (மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை) 2ஆம் இடம் வை.இந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி), 3ஆம் இடம் கா.பார்மிளா (புற்றளை மகா வித்தியாலயம்)

### (கவிதை)

**கனிஷ்ட பிரிவு (தரம் 6-8)**

1 ஆம் இடம் அ.கரிகாலன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் பா.மதுரா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 3 ஆம் இடம் இ.மேனன் (தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு (தரம் 9 -11)**

1 ஆம் இடம் ஜெ.செந்தில்செல்வன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் பா.கிருஷானி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 3 ஆம் இடம் து.துஷா (வல்லை சிவகுரு வித்தியாலயம்),

**சிரேஷ்ட பிரவு (தரம் 12 -13)**

1 ஆம் இடம் அ.ஆதித்தன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம் செ.செல்வரஞ்சினி (மெதடிஷ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 3 ஆம் இடம் கி.சுரேந்திரா (ஹாட்லிக் கல்லூரி). (ற-52)

## பரிசளிப்பு விழா

(பொன்னாலை)

பொன்னாலை வரதராஜ வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை கதிரவேற்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாசாலை அதிபர் வீ.மீனேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடகிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சி.ரங்கராஜன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி நா.சண்முகசுந்தரம் கலந்துகொள்வார்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த-49)

## கலந்துரையாடல்

அரச திணைக்கள ஊழியர்களுக்கான மும்மொழிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் சிங்கள மொழிக்கான பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

இதற்காக அரசகருமமொழித் திணைக்களத்தால் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துடன் நடாத்தப்பட்ட பயிற்சி நெறி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இப்பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் மாலை 2 மணிக்கு நடைபெறும். (ப-127)

# அமைச்சர், பிரதியமைச்சர்களுக்கான செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு இரண்டாயிரம் ரூபாவால் அதிகரிப்பு


அமைச்சர்களுக்கும், பிரதியமைச்சர்களுக்கும் வழங்கப்படும் செல்லிடத் தொலைபேசிக்குரிய கொடுப்பனவுகள் 2 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய அமைச்சர்களுக்கான செல்லிடத் தொலைபேசிக்குரிய மாதாந்த கொடுப்பனவு இனிமேல் 6 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படவுள்ளது. முன்னர் இவர்களுக்கு இதற்குரிய கொடுப்பனவாக 4 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது.

அத்துடன் பிரதி அமைச்சர்களுக்கான செல்லிடத் தொலைபேசிக்குரிய மாதாந்த கொடுப்பனவு இனிமேல் 4 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படவுள்ளது. இதுவரை காலமும் இவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாவே இதற்குரிய கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# இந்திய - அவுஸ்திரேலிய பெங்களூர் டெஸ்ட்

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளிடையே பெங்களூரில் நடை



பெறும முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கான சாத்தியம் அதிகமாக உள்ளது.

கடந்த 6 ஆம் திகதி பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் ஆரம்பமாகிய போட்டியில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 474 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியா தனது முதல் இன்னிங்சில் 246 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

3 ஆம் நாள் ஆட்ட முடிவில் அவுஸ்ரேலிய அணி தனது 2 ஆவது இன்னிங்ஸில் 4 விக்கெற்றுக்களை இழந்து 127 ஓட்டங்களை எடுத்தது.

லாங்கர் ஓட்டமெதுவும் பெறவில்லை, ஹேடன்-30, ஹாடிச் - 39, லேமன் -14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.


4 ஆம் நாள் ஆட்டம் நேற்றுத் தொடர்ந்தபோது அவுஸ்திரேலிய அணி தனது 2 ஆவது இனிங்ஸ் சல 228 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெற்றுக்ளையும் இழந்தது.

ஹர்பஜன்சிங் 5 விக்கெற்றுக்களைப் பெற்றார். ஆட்டத்தை வெல்ல முடியாவிட்டாலும வெற்றி தோல்வியின்றி முடிக்க இறுதி நேரம் வரை களத்தில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்துடன் தனது இரண்டாவது இனிங்ஸை ஆட களமிறங்கிய இந்திய அணி ஆட்ட முடிவின்போது 6 விக்கெற்



றுக்களை இழந்து 105 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

ஆரம்ப 4 விக்கெற்றுக் ளையும் 20 ஓட்டங்களுக்கு இழந்த நிலையில் ராகுல்டிராவிட்டும், இர்பான பதா



னும் 6 ஆவது விக்கெற்றுக்காக சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தனர். (ப-7)

## கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ். பல்கலைக்கழக உடற் கலவி அலகு, யாழ் மாவட்ட ரீதியாக ஆணகளுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளது.

இப் போட்டியில் பங்குபெற்ற விரும்பும் அணிகள், பல்கலைக் கழக உடற் கல்வி அலகில் விண்ணப்படிவங்களைப் பெற்று எதிர் வரும் 14 அம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ப-7)

## காலிறுதிப் போட்டியில் விக்னேஸ்வரா வெற்றி

வடமராட்சி கல்வி வல பாடசாலைக்களுக்கிடையில 18 வயதுக்குட்பட்ட மாண களுக்கான உதைபந்தாட் சுற்றுப் போட்டி நடைபெற்று கிறது.

இதன் காலிறுதிப் போட்டி கடந்த 7 ஆம் திகதி கரவெ விக்னேஸ்வராக் கல்லூரி மை னத்தில் நடைபெற்ற போட்டி கரவெட்டி விக்னேஸ்வரா க லூரியும், பருத்தித்துறை ஹா லிக் கல்லூரியும் மோதின.

இதில் விக்னேஸ்வராக் க லூரி 1:0 என்ற கோல் அடிப்ப யில் வெற்றி பெற்றது. (ப-105

# பி.சி.ச.ஐ. தொடர்ந்து செயற்பட சென்னை உயர் நீதிமன்றம் தடை

இந்திய கிரிக்கெட் சபைக்காக புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை செயற்படுவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நீதிபதிகள் விஜிதினகரன், ரவிராஜ் பாண்டியன் ஆகியோர் உட்பட்ட நீதிபதிகள் குழு, கிரிக்கெட் சபையின செயற்பாடுகளை மேற்கொள்ள இடைக்கால நிர்வாகியாக நீதிபதி மோகனை நியமித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற கிரிகெட் சபை தேர்தல் நியாயமான முறையில் நடாத்தப்படவில்லையென பல தரப்பினாலும் வழக்குகள் தாக்கல செய்யப்பட்டதை அடுத்தே இ... நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ளன.

இவ்வழக்குகளை விசாரித் நீதிபதிகள் குழுவின் உத்தரவி இடைக்கால நிர்வாகியான நீதிப மோகன் நியமிக்கப்பட்டதை அ ஏற்றுக் கொண்டால், அவருக்கா பயணச் செலவு, நிர்வாகச் செல மற்றும் ஏனைய செலவுகள் தவி மாதச் சம்பளமாக அவருக்கு ஓ இலட்சம் வழங்கப்படும் என்று கூறியுள்ளது. இதற்கு யாரும் எ ராக மனுத்தாக்கல் செய்ய ஒ வார கால அவகாசம் வழங்கப்படு தாகவும் நீதிபதிகள் குழு மேலு தெரிவித்துள்ளது. (ப-7)

## விளையாட்டு செய்திகள்

# ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டி மரியஷரபோவா இறுதிக்கு தகுதி

ஜப்பான் ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டிக்கு ரஷ்யாவின் மரியஷரபோவா தகுதி பெற்றுள்ளார். ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறும் ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டிகளில் நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்களை மரியஷரபோவா 6-2, 6-2 என்ற எளிதான செட்களில் தாய்லாந்தின் டாமரின் டானாசுகர்கனை வீழ்த்தினார். இதன் மூலம் இந்த தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார் ஷரபோவா. மற்றொரு அரையிறுதியில் அமெரிக்காவின் மசோனா வாஷிங்டன 3-6, 7-5, 6-2 என்ற செட்களில் செக் குடியரசை சேர்ந்த லாரா கோகலாவாவை வீழ்த்தினார். ஆண்கள் பிரிவில் நடந்த கால் இறுதிப் போட்டி



யில் செக்குடியரசைச் சேர்ந்த ஜிரி நோவக் 6-4, 6-4 என்ற நேர்செட்களில் தாய்லாந்தின் பாரடான் ஸ்ரீசாய்பனை வீழ்த்தினார். (ப-7)

# இலங்கை தடகளப் போட்டியில் என்.எல்.சி. ஊழியருக்கு தங்கம்

இலங்கையில் கடந்த மாதம் நடைபெற்ற 18-வது தெற்காசிய முதியோருக்கான தடகளப் போட்டியில் தமிழ்நாட்டின் என். எல்.சி. ஊழியர் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

தெற்காசியாவில் இருந்து 750 வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற இப் போட்டியில், இந்தியாவிலிருந்து என்.எல்.சி. சார்பில் 4 பேர் பங்கேற்றனர். இலங்கை தடகள கழகத்தின் பி.எச்.டி. வைத்திய அதிகாரி இப் போட்டியை தொடங்கி வைத்தார்.

40 வயதோருக்கான உயரம் தாண்டுதல் பிரிவிலும், 110 மீட்டர் தடை ஓட்டத்திலும் எம். முரளிதரன என்பவர் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இவர் என்.எல்.சி. சுரங்கத்தில் பணிபுரிகிறார்.

அதேபோன்று என்.எல்.சி. நகர நிர்வாகப் பிரிவில் பணியாற்றும் ஜீனத்முனைவர் என்பவரும் இப் போட்டியில் பங்கேற்று 45 வயதோருக்கான நீளம் தாண்டுதல், 100மீ, 200மீ போட்டிகளில் வெள்ளிப் பதககமும், 400மீ ஓட்டத்தில வெண்கலப்பதக்கமும் பெற்றுள்ளார்.

வெற்றி பெற்றவர்களை அந் நிறுவன விளையாட்டுத்துறை பொதுமேலாளர் ஜி.மதியழகன், துணைப்பொதுமேலாளர் எல்.சந்தானக்கிருஷ்ணன் உள்ளிட்டோர் பாராட்டினர். (ப-7)

# பாக்.இந்திய நட்புறவு ஹாக்கி தொடரை இழந்தது இந்தியா

டெஸ்ட் ஹாக்கி தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஏழாவது போட்டியில் பாகிஸ்தான் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றதன் மூலம் சொந்த மண்ணில் தொடரை இந்தியா இழந்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் இடையிலான எட்டு போட்டிகள் கொண்ட நட்புறவு ஹாக்கி தொடரில முதற கட்டமாக, நான்கு போட்டிகள் பாகிஸ்தானில் நடந்து முடிந்தன. இதில் பாகிஸ்தான் இரண்டு போட்டிகளும், இந்தியா ஒன்றையும் வென்றது. ஒரு போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

நட்வுறவுத் தொடரில் 2-1 என்ற முன்னிலை பெற்றது பாகிஸ்தான். தொடரின் எஞ்சிய நான்கு போட்டிகள் இந்தியாவில் நடந்து வருகின்றன. ஐந்தாவது போட்டியில் பாகிஸ்தான வெற்றி பெற்றது. ஆறாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இதன் மூலம் தொடரில் 3-1 என்ற வலுவான நிலையை பெற்றது பாகஸ்தான். ஏழாவது போட்டி அமிர்தசரசில் நேற்று முன்தினம் நடந்தது. வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கிய இந்திய அணிக்கு சோகைல அபாஸ் துவக்கத்திலே அதிர்ச்சி அளித்தார். இவர் ஆட்டத்தின் எட்டாவது நிமிடத்தில் கோல் அடிக்க பாகிஸ்தான் 1-0 என்ற முன்னிலை பெற்றது. இந்த கோல் மூலம் அபாஸ் சர்வதேச அளவில் அதிக கோல் அடித்த முதல் வீரர் என்ற பெருமையை பெற்றார். இந்திய வீரர்களோ கிடைத்த வாய்ப்புகளை வீணடித்தனர்.



இந்நிலையில் 47வது நிமிடத்தில் பாகிஸ்தானின் ரேஹன்பட் இரண்டாவது கோல் அடித்தார். இதற்கு அடுத்த நிமிடத்திலே இந் தய அணியின் அர்ஜுன் ஹாலப்பா கோல் அடித்து அணிக்கு நம் பிக்கை அளித்தார். ஆனால் பாகிஸ்தானின் தற்காப்பு ஆட்டத்தை மீறி இந்திய வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை. இறுதியில் பாகிஸ்தான் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது. இந்த தோல்வியின் மூலம் இந்திய அணி 1-4 என்ற பின் தங்கிய நிலையில் சொந்த மண்ணிலே தொடரை இழந்தது. தொடரின் எட்டாவது மற்றும் கடைசிப் போட்டி ஐதரபாத்தில் இன்று நடைபெறும். (ப-7)

# கிறிக்கெற் போட்டிக்காக சென்னையில் பாதுகாப்பு தீவிரம்

செனனையில் இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே கிரிக்கெட் போட்டி நடைபெறுவதை யொட்டி பொலிஸ் இணை கமிஷனர் சுனில்குமார் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

துணை கமிஷனர்கள் கார்த்திகேயன், திருஞானம், அருண் உள்பட இரண்டாயிரம் பொலிஸார் இப்பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

இதையொட்டி அப்பகுதியில் போக்குவரத்திலும் மாற்றம் செய்யபபடவிருக்கிறது. மைதானத்திற்குள் செல்லும் பொதுமக்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

மைதானத்திற்குள் பட்டாசு போன்ற வெடிபொருள்களையும் உணவுப் பொட்டலங்களையும் கண்ணாடிப் போத்தல்கள், தீப்பெட்டி போன்றவற்றையும் எடுத்துவர தடை விதிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் போட்டியையொட்டி விஷேட பஸ் சேவையும் நடைபெறும். இப் போட்டியை யொட்டி கிரிக்கெட் பயிற்சி பெறவரும் இந்திய - அவுஸ்திரேலிய விளையாட்டு வீரர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படும். பயிற்சி செய்யும் மைதானத்திலும் அவர்கள் தங்கும் ஹோட்டல்களிலும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ப-7)

# ஹாக்கியில் 268 கோல் அடித்து சோகைல் அபாஸ் உலக சாதனை

சர்வதேச அளவில் ஹாக்கிப் போட்டியில் அதிக கோல்களை அடிததவர் என்ற சாதனையை பாகிஸ்தான் ஹாக்கி வீரர் சோகைல் அபாஸ் ஏற்படுத்தியிருக்கிறார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே நடைபெறும் நட்புறவுக் ஹொக்கித் தொடரின் 7ஆவது போட்டியிலேயே 268 ஆவது கோலை அடித்து அபாஸ் இச்சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இதற்கு முன்னர் ஹொலந்தின் போல்லிட்ஜென்ஸ் என்ற வீரரே இதுவரை 267 கோல்கள் அடித்து சாதனையாளராக இருந்தார். இந்த ஆணடில் அதிகமாக 60 கோல்களை அடித்த வீரரான அப்பாஸ் 100 மற்றும் 200 கோல்களை குறைந்த போட்டிகளில் பெற்றவர் என்ற பெருமைக்கும் உரியவா.

அபாஸ் இதுவரை 212 சர்வதேச ஹாக்கிப் போட்டிகளில் பங்கு பற்றி இந்த 268 கோல்களை அடித்தமை குறிப்பிடத்தக்கது. (ப-7)

## இன்று ஒரு தகவல்

# நீதி விசாரணை

மனுநீதிச் சோழன் வரலாறு நமக்குத் தெரியும். அதுபோல் நீதி தவறாத ஆட்சியாளர்கள் பலபேர் இருந்திருக்கிறார்கள் இந்த உலகத்தில்.ஹஸரத் உமர் பின் கத்தாப் (ரலி) என்று ஒருவர். இஸ்லாத்தின் இரண்டாவது கலிபா இவர். இவரது ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி.

அந்த மன்னருக்கு ஒரு மகன். அவரது பெயர் அபூ ஷஹ்மா. அந்த மிசர் நாட்டு கவர்னர் அமர் பின் ஆஸ (ரலி) அந்த மன்னரது மகன் கவர்னர் அவர்களுடைய கவனிப்பில் இருந்தார். அந்த சமயத்தில் ஒருநாள் அவர் மதுபானம் அருந்தினார். கவர்னருக்கு இது தெரிந்துவிட்டது. என்ன செய்வது? அவருக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. தவறு செய்தது மன்னனின் மகன். கவர்னர் யோசனை செய்தார். அவரை மெதுவாகத் தனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அதிகமாக அவரைக் கஷ்டப்படுத்தாமல் ஒரு சிறிய தண்டனையைக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டார். ஏதோ பேருக்கு ஒரு தண்டனை அவ்வளவு தான்.

இது நடந்து கொஞ்ச நாட்கள் கழித்து மன்னருக்கு இந்த விடயம் தெரிய வந்தது. தனது மகன் என்பதனால் கவர்னர் லேசான தண்டனையுடன் விட்டுவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டார். உடனே கவர்னருக்குத் தகவல் அனுப்பினார். "அமர்வின் ஆஸ் அவர்களே! எனது மகன் மதுபானம் அருந்தியிருக்கிறான்.அது உங்களுக்குத் தொ்ந்தவுடன் தண்டனை கொடுத்திருக்கிறீர்கள்.

கலீபாவின் மகன் என்ற காரணத்தினால் குறைவான தண்டனையைக் கொடுத்ததாகக் கேள்விப் படுகிறேன். இது ஷரீஅத்தின் படி மாபெரும் குற்றம். உங்களுடைய நடத்தையும் மன்னிக்கக் கூடியதல்ல. இந்தக் கடிதம் கணடவுடனே மகன் ஆபூஷஹ்மாவை மதீனாவுக்கு அனுப்பி வைக்க வேண்டியது என்று கடிதம் எழுதினார்.

அதைப் பார்த்த கவர்னரும் உடனே கலீபாவின் மகனை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார். மன்னர் முன் நீதி விசாரணை நடந்தது. அதன்படி தனது மகனுக்கு சவுக கடி வழங்கும் படி உத்தரவிட்டார். ஹஜரத் உமர்கத்தாப்.

தண்டனை நிறைவேற்றப்பட்டது. கூடியிருந்த எல்லோரும் "ஐயா கொஞ்சம் கருணை காட்டுங்கள்" என்று மன்னிடம் வேண்டிக் கொண்டார்கள். அந்த வேணடுகோளை மன்னர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் சொன்னார் "நீதியின் முன்னால் தந்தை மகன் அனபு, நேசம், உறவுமுறை களையெல்லாம் கவனிக்க முடியாது. குற்றம்செய் தவர் தண்டிக்கப்பட வேண்டியவர். அவர் யாராக இருந்தாலும் சரி" என்றார்.

எல்லா ஆட்சியாளர்களுமே கவனிக்க வேண்டிய ஒரு செய்தி இது. அரசாங்க அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் ஒருநாள் தனது அரசாங்கக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் அவரைப் பார்க்க ஒரு பெரிய மனிதர் வந்தார். இவர் தனது சொந்த வேலை காரணமாக வந்துள்ளதைப் புரிந்து கொண்டார். உடனே அதுவரையில்எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டு இன்னுமொரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டார்.

இந்தச் செயலுக்கு என்ன காரணம் என்று கேட்டார். இதற்கு அவர் சொன்னார் "ஐயா நீங்கள் வந்த போது இங்கே எரிந்து கொண்டிருந்தது அரசாங்க விளக்கு. இப்போது எரிவது சொந்த விளக்கு. சொந்த விஷயங்களைப் பேசும் போது அரசாங்கப் பணத்தைச் செலவு செய்யக் கூடாதல்லவா? அதனால் தான் விளக்கை மாற்றினேன்" என்றார்.

இப்படியெல்லாம் பலபேர் இந்த உலகத்தில் இருந்திருககிறார்கள். ஆனால் இப்போதெல்லாம் பலபேர் அப்படி இருப்பதில்லை.

இப்போதும் ஒருத்தர் அப்படித்தான். அரசாங்க விடயங்களைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த சமயத்தில் ஒருபெரிய தொழிலதிபர் அவரைப் பார்க்க வந்தார். இவர் சடாரென்று எழுந்து எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டார். எங்கும் ஒரே இருட்டு.

"ஏன் வி[illegible]க்கை அணைத்து விட்டீர்கள்?" என்று கேட் டார் வந்தவர். "இங்கே நடப்பது மற்றவரின் கண்ணில் படக் கூடாதே என்பதற்காகத் தான் விளக்கை அணைத் தேன். நீங்கள் கொண்டு வந்திருக்கும் பொருட்களை ஓரமாக வைத்து விட்டுப் போய் விடுங்கள். அதன் பின்பு விளக்கைப் போடுகிறேன்" என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மக்களின் போராட்டங்கள் ஊடாக ஆட்சியை கைப்பற்றுவதே எமது பிரதான நோக்கம்

## ஐ.தே.க. தலைவர் ரணில் சூளுரை

(கொழும்பு)



**கடந்த 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றம் பெரும்பான்மை ஊடாக ஆட்சியைக் கைப்பற்றியது போன்று இனிவரும் காலத்தில் மக்கள் போராட்டங்களின் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றப் போவதாகச் சூளுரைத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக எமது கட்சி நாட்டில் பரவலாகப் போராட்டங்களை நடாத்தி வருகிறது.

நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையைச் சிதைப்பதற்காகவே இவ்வாறான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் அடுத்த தேர்தலின் போது மக்களின் பெரும்பான்மைப் பலத்தோடு நாங்கள் ஆட்சியைக் கைப்பற்ற வழிசமைக்கும்.

எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு இடமபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்கள் தயாராகி வருகின்றோம்.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஐக்கிய தேசியக் கட்சி பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

அதேநேரம் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அரசாங்கம் வரவு- செலவுத் திட்டத்தைச சமர்ப்பிக்கும் தினத்தில் நாடு முழுவதும் பாரிய ஆர்பபாடடங்களையும் நாம் நடாத்தவுள்ளோம்.அடையாள அட்டைகளைத் தேர்தல் வாக்களிப்பில் கட்டாயமாக்கும் நடைமுறை மூலம சுமார் 38 இலட்சம் மக்களின் வாக்குரிமையினைப் பறிக்க அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டது.

ஆனால் அத் திட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்ததன் மூலம் எமது கட்சி இவ்வாறான பிரச்சினைகளைத் தடுத்து விட்டது எனத் தெரிவித்தார். (ந-121)

# அமைச்சுப் பொறுப்புக்கள் சிலவற்றில் புதிய மாற்றம்

(கொழும்பு)

தொழில் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் பொறுப்பிலிருந்து சுற்றுலாத்துறையை விடுவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெயிளியிட்டுள்ளார்.

இந்த அறிவித்தல் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. தற்சமயம் இந்த அமைச்சை அனுரா பண்டாரநாயக்க வகித்து வருகின்மை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின படி தொழில் மற்றும் சுற்றுலாத்துறைக்கான திணைக்களங்களை வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,தோட்ட உட்கட்டமைப்பு அமைசசுடன் தோட்ட வீடமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சு சேர்க்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பேரியல் அஷ்ரப்பின் பொறுப்பிலிருநத தோட்ட வீடமைப்பு அமைசசு அமைச்சர் முத்துசிவலிங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இதேவேளை, சி.பி.ரத்னநாயக்காவுக்கு வழங்கியுள்ள அமைசசுப் பணிகள் யாவும் நுவரெலியா மாவட்டத்துக்குள் வரையறுக்கப்பட்டுளளது. (ந-8)

# இராசி பலன்

**10.10.2004**

**(புரட்டாதி 24, ஞாயிற்றுக்கிழமை)**

**ஏகாதசி மு.ப 08.57 மணிவரை**

**மகம் பின்னிரவு 01.08 மணிவரை**

**இராகுகாலம் 4.32- 6.02 மணிவரை**

**சுபநேரம் 09.02 - 10.32 மணிவரை**

**ஏகாதசி விரதம், சந்தியஸ்த மகாளயம்**

**மேடம்** *வியாபார சிந்தை, பணத்தட்டுப்பாடு, குடும்பக் கவலை, முயற்சி தாமதம்.*

**இடபம்** *மனச் சஞ்சலம், ரோகநிலை, எடுத்த கருமங்கள் தாமதம், உறவினர் சந்திப்பு.*

**மிதுனம்** *மனோ தைரியம், நற்கீர்த்தி, முயற்சி கைகூடும், போசன சுகம்.*

**கடகம்** *அதிக செலவு, மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, காரிய தாமதம்.*

**சிங்கம்** *வெகுமானம், சயனசுகம், மாதர் நட்பு, முயற்சி கைகூடும்.*

**கன்னி** *சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், பிரயாணம், தனவிரயம்.*

**துலாம்** *நண்பர்கள் சந்திப்பு, ஆனந்தம், காரிய சித்தி, போசன நன்மை.*

**விருச்சிகம்** *நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படல், இஷ்டசித்தி, தொழில்சிந்தை.*

**தனுசு** *தேசாந்திரவாசம், குடும்பக்கவலை, உடல்நலக்குறைவு, கட்டுப்பாடு.*

**மகரம்** *மனக்கவலை, சரீரபீடை, பொருள விரயம், முயற்சி தாமதம்.*

**கும்பம்** *கீர்த்தி, பிரயாண நன்மை, மனோ தைரியம், காரிய சித்தி.*

**மீனம்** *தேகநலன், விருந்துபசாரம், காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

- வளவன்

# கடவுச் சீட்டுக்களை வழங்க புதிய நடைமுறை அமுல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்களை அனுப்பும் முகவர் நிலையங்கள் ஊடாக கடவுச்சீட்டுகளை வழங்கும் புதிய திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

குடிவரவு- குடியகல்வுத் திணைக்களம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுடன இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்தவுள்ளது. குடியகலவு குடிவரவு கட்டுப்பாட்டாளரிடம் இதற்கான விண்ணப்பங்களை முகவர் நிலையங்கள் வழங்கி கடவுச்சீட்டிற்கான கொடுபபனவுகளை வழங்கும்.

கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்கு செல்வோரை பிறர் மோசடி செய்வதைத் தடுக்கும முகமாகவே இத் திட்டம் அமுல் செய்யப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சங்கத் தலைவர் ஸ்ராச் தந்தெனிய தெரிவித்தார். (ந-8)

# தொ.நு.உத்தியோகத்தர் பற்றாக்குறையால் கட்டுமாணப் பணிகள் தாமதமடைகின்றன

## யாழ். மாநகர ஆணையாளர் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையில் போதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இன்மையில் கட்டுமாணப் பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருவதாக யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க. குணராசா விசனம தெரிவித்துள்ளார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து வெளியேறுபவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களில் அதிக சம்பளததுக்கு வேலைக்கு செல்வதால் எமது பகுதிக்கு எவரும் வருவதில்லை.

இதனால் கட்டப்படுகின்ற கட்டடங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியும் குறைவாகவே காணப்படுகின்றது.

எனவே இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்பேச்சு நடத்தவுளளோம் எனவும் மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# வடக்கு-கிழக்கு வைத்தியசாலைகளில் 1100 சுகாதார உத்தியோகத்தர் உள்ளீர்ப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் புதிதாக 400 தாதியர்களும், 700 குடும்பநல அதிகாரிகளும் நியமிக்கப்படவுள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். எம். எஸ். ரத்னாயக்கா தெரிவிததார்.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை திறந்து வைத்துப்பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய ரத்னாயக்கா, வடக்கு -கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறையில் நிலவுகின்ற குறைபாடுகளைத் தீர்த்து வைப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிற்றூழியர் பற்றாக்குறை, வாகனப்பற்றாக்குறை உட்பட பல குறைபாடுகள் விரைவில தீர்த்து வைக்கபபடும் என்றார். (ந)

# விடுதலைக்காக விஸ்வரூபமெடுத்துள்ள தமிழீழப் பெண்கள் எழுச்சி தினம்

பெண் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும்! இப்படித்தான் இருப்பாள்! இதற்கும் மேல் அவளால் முடியாது! ஆணைவிட



பெண்ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்தே தற்போதைய மனித சமூகத்தில் வேரூன்றிக் காணப்படுகிறது.

வரலாற்றில் காணப்படும் இலக்கியம், இதிகாசம், புராணம் என எல்லாவற்றிலும் பெண்ணின் புற அழகிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதே தவிர பெண்ணின் பலத்ததை வெளிக் கொணரவில்லை.

பெண் எனப்பட்டவள் இயலாமையின் வடிவம் என்ற மாயையை தோற்றுவிப்பதில் சமூகத்தின் பிற்போக்குவாதிகள் வெற்றி கண்டுள்ளனர்.

மனித குல வரலாற்றில் கிறிஸ்துவுக்கு 6000 (ஆறாயிரம்) ஆண்டுகளுக்கு முன் தாய் வழிச்சமூகமே இவ்வுலகில் ஆட்சியுரிந்தது. காடுகளில் குழுக்கள் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் தாயின் இராஜ்சியமே நடைபெற்றது. குழுவிற்கு தாய் தான் தலைமை தாங்கினாள்! பெண்ணே பெரிதாக மதிக்கப்பட்டாள் தாய் என்ற சொல்லே மருவி தலைவி என்றாகிவிட்டது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். தன்னுடைய இனத்தைக் காக்கும் சக்தியாக பெண் விளங்கினாள் அவளின் சக்திக்கு கட்டுப்பட்டு அவள் பின்னால் செல்ல சமூகம் தயாராக இருந்தது அன்று.

தனது இனத்தைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு உணவு கொடுக்கவும் தேவையானவற்றை தேடிக் கொடுக்கவும், தாயானவள் தன்னைப் பலி கொடுக்கவும் கூட தயாராக இருந்தாள்.

எதிரிகளிடமிருந்தும், காட்டு விலங்குகளிடமிருந்தும் தனது இனத்தைக் காக்க தானே தலைமை தாங்கி வழி நடத்தினாள். பஞ்சாயத்து சபையை நிறுவிநிர்வாகம் செய்தாள்.

தமக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய எதிரிகளை தேடித் தேடி தாக்கி அழித்தார்கள் பெண்கள். கி.மு.5000 ஆண்டுகளுக்கு முற்பட்டகாலம் பெண்கள் சாம்ராஜ்யமாகவே இருந்தது. அக்காலத்தில் தான் சமூகம் முழுவதும் ஒரே குடும்பமாகவிருந்தது என ஆய்வாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர்.

உலகில் சரிபாதியினர் பெண்கள், இந்தச் சரிபாதித் தொகையினரான பெண்கள் போராட்டத்தில் பங்குபெறாது எமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படாது. சரிபாதியினரான பெண்களுக்கு விடுதலையின்றி எமது தேச விடுதலையும் முழுமை பெறாது என்பது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் கருத்தாகும்.

தமிழரது வாழ்வில் அடிமைத்தனம் என்பது பல ஆண்டுகளாக நீடித்துள்ளது. அந்நியப்படையெடுப்புக்களால் தமிழரது கலாசாரம், பண்பாடு என்பன சிதையுண்டு போயுள்ளன.

தமிழர் வாழ்வில் பெண்மதிக்கப்பட்டு அவளுக்குரிய கௌரவம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

ஆனால் வஞ்சகமாக ஆன்மீக தத்துவங்களைப் புகுத்தி ஆரிய சக்கரவர்த்திகள், திராவிடர்களை அடிபணிய வைத்தார்கள். அதுதான் தமிழ்மக்களின், தமிழ்ப் பெண்களின் வாழ்வுக்கு அஸ்தமனமாகவிருந்தது.

இப்படிப்பட்ட சமூகக் கட்டமைப்புக்கள் இறுக்கமாகவிருந்த சமூகத்தில் இருந்துதான 2ம் லெப்.மாலதி உருவானாள். ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு வலுவூட்ட பெண்களால் முடியும். அப்போது தான் போராட்டம் பலம் பெறும் என்ற மாலதியின் இலட்சிய தாகத்தை பெண்ணியம் தீர்த்துக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் வித்தாக 2ம் லெப். மாலதி விதைக்கப்பட்டாள்.

இன்று தமிழீழப் பெண் போராளிகள் போர்க்களத்தில் அளப்பெரும் தியாகங்களையும், சாதனைகளையும் நிகழ்த்தி உலகப் பெண்களுக்கு உன்னதமான எதிர்காலத்தைக் காட்டிநிற்கின்றனர்.

ஏற்கனவே பெண்ணுக்கு கொடுத்திருந்த பிம்பம் உடைக்கப்பட்டிருக்கிறது. பெண்களின் ஆற்றலை, பலத்தை, வல்லமையை நிரூபிக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்க தாங்கள் யாரென்பதை காட்டி நிற்கிறார்கள்.

ஈழத்தில் இன்று பெண்கள் விஸ்வரூபமெடுத்து நிமிர்ந்து நிற்கிறார்கள். விடுதலைப் போராட்டத்தில் இணைந்த பெண்கள் சாதனை செய்தார்கள் இல்லாவிட்டால் அடுபபோடும, நெருப்போடும் தான் காலத்தைக் கழிக்கவேண்டும் என்பதை ஏனையோருக்கு புரியவைத்துள்ளனர்.

ஆயிரமாயிரம் மாவீரர்கள் ஏற்றி வைத்த சுதந்திர சுடரில் அகலத் தெரியும் அந்த விடுதலைப் பாதை வழியாக தலைவருக்கு உறுதுணையாக நின்று பெண் போராளிகள் போராடி வருவது தமிழீழப் பெண்கள் பெருமை கொள்ளவேண்டிய விடயமாகும்.

அடக்கு முறைகளுக்கு அடிபணிந்து அடிமைகளாக வாழ்வதை விட விடுதலைக்காக வேள்வியில் குதித்து வீர மரணத்தைத் தழுவிக கொள்ள பெண்கள் தயாராகவிருக்கிறார்கள் என்பது சிங்கள ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும்.

பெண் போராளிகளது அபாரமான பேராற்றலையும், அவர்களது தீரத்தையும்,தியாகத்தையும் எதிரியே நன்கறிவான்.

அக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளும் 2ம் லெப்டினன்ட மாலதியின் நினைவு நாளும ஆகும். அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தமிழீழப் பெண்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். வீர தீரத்தினாலும், தியாகத்தினாலும், விவேகத்தினாலும் உலகிற்கே வழிகாட்டியாக உயர்ந்து நிற்கிறாள் என்பதை அனைவரும் ஏற்றுள்ளனர்.

ஐம்பது வருடகால ஆக்கிரமிப்புக்கும முப்பது வருடகால கொடிய போருக்கும் தமிழீழப் பெண்கள் முகம் கொடுத்து தமது நுண்ணிய ஆற்றலினால் அனைத்துத் தடைகளையும் அறுத்தெறிந்து வருகிறார்கள்.

தலைவர் பிரபாவின் காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தம்மை வளர்த்தது மட்டுமன்றி தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்தும் வருகிறார்கள்.

தமிழ்த்தேசிய உணர்வுகளை கட்டிஎழுப்பி புதிய பெண்ணெழுச்சிக்கு வித்திட்டுள்ளார்கள்.

அதிகாரப் போக்கினாலும், ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுத வெறியினாலும், தமிழர்களின் ஜனநாயக உரிமை நசுங்கியது. ஆனால் இன்றைய பெண் தலைமுறையினர் சுதந்திர வேட்கை கொண்டு விடுதலைக்காக ஆயுதக் கருவிகளை கையிலேந்தி தீர்த்த தீரமான வேட்டுக்களாலேயே இன்று ஜனநாயகம் மலர்ந்தது மட்டுமல்ல பெண்ணினத்தின் விடுதலையும் முழுமைபெற்றது. ஆண் - பெண் சமநிலைக்குப் புத்துயிர் பெற்றுள்ளது. மனித ஆளுமை பால் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது.

ஒரு பெண் தன் கையில் விலங்கில்லை என நினைக்கிறாள். ஆனால் அவள் மனங்களில் விலங்கிடப்பட்டிருக்கிறது. மனம் எந்நேரமும் இருட்டாக இருக்கிறது. மனம் வெளிச்சத்திற்கு வரவேண்டும்.

எங்களுக்குள்ளே அறிவு உலகத்தைத் தேடுவோம். அதுவே வாழ்வுக்கு வழிவகுக்கும்.

2ம் லெப்.மாலதி 17 ஆண்டுகளுக்கு முன் அந்த இலட்சியக் கனவோடுதான் வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள். அந்த நடுராத்திரி 1மணிக்கு வல்லாதிக்க இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள கோப்பாய் கிரேசர் வீதியில் காத்திருந்தாள். இந்திய இராணுவம் தமிழ்ப் பெண்களுக்கு இழைத்த அநீதியை இன்னமும் தமிழர் மனங்களில் ஆறாத காயமாகவுள்ளது. 87 அக்டோபர் 10 ஆம் திகதி நள்ளிரவு 1மணியளவில் இந்திய வல்லாதிக்க இராணுவம் மீது அவளது m.16 ரகத் துப்பாக்கியில குண்டுகள் சீறிப் பாய்ந்தன. அந்தத் தாக்குதல் 2ம் லெப் . மாலதியின் இறுதித் தாக்குதல், புலிகள் போராட்ட வரலாற்றில் முதல் பெண் போராளி 2 ம் லெப். மாலதி வித்தாகி வீழ்ந்தாள். அதுவே தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வித்தாக அமைந்தது.

**கலி**

---

## 5ஆயிரம் கோடி ரூபாவுக்கு நடந்தது என்ன? அத்வானி மீது ஊழல் புகார் குற்றச்சாட்டு

(டில்லி)

முத்திரைத்தாள் மோசடியில் கிடைத்த 5 ஆயிரம் கோடி ருபா இருந்த இடத்தை முன்னாள் துணைப்பிரதமர் அத்வானியிடம் தெரிவித்ததாக டெல்கி தரப்பு வழக்கறிஞர் கூறியிருக்கும் புகார் பெரும பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசு கஜானாவில் சேர்க்கப்படாமல் அந்தப் பணம் எங்கு சென்றது என்று டெல்கியின் வழக்கறிஞர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்குறித்து உரிய விசாரணை நடத்தவேண்டுமென்று காங்கிரஸ்கட்சி கூறியுள்ளது.

30 ஆயிரம் கோடி ரூபா முத்திரைத்தாள் மோசடியில் முக்கிய குற்றவாளி அப்துல் கரீம்டெல்லி இவரது வழக்கறிஞர் அப்துல் ரஹ்மான் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் டெல்கி சேர்த்து வைத்திருந்த 5 ஆயிரத்து 500 கோடி ரூபா பணம் பதுக்கப்பட்டிருந்த இடம் பற்றிக் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அத்வானியிடம் தான் தெரிவித்ததாகக் கூறினார்.


இந்தப் பணத்தை அரசு கஜானாவில் சேர்க்க அத்வானி உறுதியளித்ததாக அவர் தெரிவித்தார். ஆனால் அந்தப் பணம் கஜானாவில் சேர்க்கப்படாமல் எங்கே சென்றது என்பது பற்றி அத்வானி நீதிமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டுமென டெல்கியின் வழக்கறிஞர் வலியுறுத்தினார்.

இது பற்றிய முழுவிபரங்களையும் குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோருக்கு மனுவாகத் தாம் அறிவித்துள்ளதாகவும் அப்துல் ரஹ்மான் கூறினார்.

அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள இந்தக் குற்றச்சாட்டுப்பற்றி உரிய விசாரணை நடத்தவேண்டுமென்று காங்கிரஸ்கட்சி கூறியுள்ளது.

ஆனால், அத்வானி மீதான புகாரை பா.ஜ.க.மறுத்துள்ளது. அந்தக்கட்சியின் துணைத்தலைவர் முக்தார் அபாஸ் நல்லி மகராஷ்ட்ரா சட்டமன்றத் தேர்தலை மையமாக வைத்தே இந்தப் புகார் கூறப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (து)

## இந்தியச் செய்திகள்



வரும் வியாழக்கிழமை சென்னையில் ஹொண்டா நிறுவனத் தின் விற்பனை மேலாளர் என்.கே.ரத்தனால் அறிமுகப்படுத்தப் படவிருக்கும் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான 150 சி.சி.இன்ஜின் சக்தி கொண்ட புதிய 'யூனிகார்ன்' மோட்டார் சைக்கிள் இது.



கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஸ்ரீநகர் பள்ளிக் கூடக் கலை நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக முழு அலங்காரத்துடன் தயாராக நிற்கும் காஷ்மீர் மாணவி.

## டாக்டர்களின் அலட்சியத்தால் ஊசலாடும் பெண்ணின் உயிர்

புதுவை மருத்துவமனையில் மகப்பேற்றுக்காக சிசரியன் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட போது தனது வயிற்றுக்குள் பாண்டேஜ் துணி, மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை வைத்து டாக்டர்கள் தைத்துவிட்டதாகப் பெண் ஒருவர் புகார் கூறியுள்ளார்.

திண்டிவனம் அருகிலுள்ள கீழ் மாவிலங்கை கிராமத்தைச் சேர்ந்த தரணி என்ற இந்தப் பெண் கடந்த ஜூன் மாதம் புதுவை அரசு மகப்பேற்று மருத்துவமனையில் சிசாியன் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையொன்றைப் பெற்றார். பின்னர் வீட்டுக்கு அனுப்பப்பட்ட அவருக்குப் 13 நாட்கள் கழித்து வயிற்றில் வீக்கம் ஏற்பட்டுச் சீழ் வடிந்தது. இதைத் தொடர்ந்து கடந்த ஆகஸ்ட் மாதம் அதே மருத்துவமனையில் சேர்ந்த போது எந்தப் பிரச்சினையும் இல்லையென்று கூறி அனுப்பிவிட்டதாக அவர் கூறியுள்ளார்.


இதையடுத்து சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சேர்ந்து அறுவைச் சிகிச்சை செய்த போது தரணியின் வயிற்றுள் இருந்து பாண்டேஜ் துணி மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் எடுக்கப்பட்டன.

புதுவை மகப்பேற்று மருத்துவமனை டாக்டர்களின் அலட்சியத்தால் தரணியின் குடல் முழுவதும் அழுகிவிட்டதால் குடலில் பல பகுதிகளை வெட்டி எடுக்க நேரிட்டதாகத் தரணியின் கணவர் கூறினார்.

இதனால் உடல் நிலை மிகவும் மோசமடைந்து தரணி உயிருக்குப் போராடி வருவதாகவும் இதற்கு டாக்டகர்களின் அலட்சியமே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(து)


# சினிமாச் சிதறல்




'மகா நடிகன்' படத்தில் அரசியல் வாதிகளை வறுத்தெடுத்திருக்கும் சத்யராஜ், மற்ற ஹீரோக்களையும் விடவில்லையாம். சினி உலகின் நிழல் சமாச்சாரங்களையும் இந்தப் படத்தில் புட்டு புட்டு வைத்திருக்கிறார்களாம். படம் நிச்சயம் சலசலப்பை ஏற்படுத்தும் என்கிற பேச்சு ஒருபக்கம் இருந்தாலும் 'சேம் சைடு கோல் அடிக்கிறார் இயக்குநர் ஷக்தி சிதம்பரம்' என்கிற கடுப்பும் பலருக்கு இருக்கிறது.

தனது முதல் படத்தையே சுள்ளென்று எடுத்தவர் அந்தத் தயாரிப்பாளர். சிங்கிள் பேமென்ட்டில் ஹீரோவைக் கவிழ்த்து தன் படத்தை வெற்றிகரமாக ரிலீஸ் செய்தார். ஆனால் படம் எதிர்பார்த்த ரிஸல்ட்டைத் தரவில்லை. தொடர்ச்சியாக மூன்று இயக்குநர்களுக்கு அட்வான்ஸ் கொடுத்திருந்த அந்தத் தயாரிப்பாளர், இப்போது விநியோகஸ்தர்களுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறாராம். ஆனால் அந்தப் பலமான ஹீரோ, தனது சம்பளத்தைத் திடுமென உயர்த்தியதற்கு இந்தத் தயாரிப்பாளர்தான் காரணம் என்பதால் தயாரிப்பாளர் சங்கப் பிரதிநிதிகள் இவருடைய தவிப்பை அமைதியாக ரசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

## தமிழ்ப் படத்தில் அமிதாப் பச்சன்



தமிழ்ப் படத்தில் அமிதாப் பச்சன் நடிக்கப்போகிறார். இதற்கான பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. இந்த முயற்சியில் இறங்கியிருப்பவர் பிரசாந்தின் தந்தை தியாகராஜன்.

**இது குறித்து தியாகராஜன்:-**

நான் இயக்கும் 'பொலிஸ்' படத்தில் அமிதாப்பை நடிக்கவைக்க உள்ளேன். தமிழில் நடிக்கவேண்டும் என்பது அவரது நீண்ட நாள் ஆசை. இந்தப் படத்தின் மூலம் அது நிறைவேறலாம்.

அமிதாப் இல்லையெனக் கூறும் பட்சத்தில் கோலிவுட்டில் இருக்கும் ஒரு பெரிய நடிகரை நடிக்கவைப்பேன். கமல்ஹாசனின் ரேஞ்சில் இருக்கும் ஒரு நடிகரையும் கேட்டிருக்கிறேன. அவர் யார் என்று இப்போது கூறமாட்டேன்.

ஹிந்தியில் வெளியான 'காக்கி' படத்தின் ரீமேக்தான் இது. ஹிந்தியில் அமிதாப் செய்த கரக்டரை அவர் செய்தால் நன்றாக இருக்கும். எனவே அவரைக் கேட்டுள்ளேன்.

**வேறு யார் நடிக்கிறார்கள்?**

அதுல் குல்கர்னி, ஷாயாஜி ஷிண்டே, ஆசிஷ் வித்யார்த்தி, முகேஷ் ரிஷி, டெல்லி கணேஷ், கௌசல்யா ஆகியோர் நடிக்கின்றனர். லாரா தத்தா ஒரு பாடலுக்கு வருவார்.

'ஷாக்' படத்துக்குப் பின் தியாகராஜன் இயக்கும் படம்தான் 'பொலிஸ்'. ஷாக் போலவே இதிலும் எல்லாமே தியாகராஜன் தான். ஹிந்தியில் இந்த ஆண்டு வெளியாகி சக்கைபோடு போட்ட படம் 'காக்கி'.

நேர்மையான சில பொலிஸ் அதிகாரிகளின் கதை இது.

## 'காதல் வந்துச்சா'

சிவராம் மூவிஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'காதல் வநதுச்சா' கேரளத்தைச் சேர்ந்த ரம்யாவுக்கு ஜோடியாக புதுமுகம் அசோக்ராம் நடிக்கிறார். மற்றொரு ஹீரோவாக சீனிவாசன் நடிக்கிறார். ராஜீவ் காந்த், அலெக்ஸ், பசி சத்யா, பெஞ்சமின், கொட்டாச்சி நடிக்கின்றனர்.


கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் ராமமூர்த்தி. ஆர். ரமணி, பிராமன் தயாரிக்கின்றனர். சங்கீத பிரியா இசையமைக்கிறார்.

## இருபது நாட்களாக சண்டை!

ஆமாம்...! 'அந்நியன' படத்துக்காக பிரசாத் ஸ்டூடியோவில் ஒரு ஃபுளோரில் தரையை இருபதடி ஆழத்திற்குத் தோண்டிவிட்டார்கள். அங்கு தொட்டி ஒன்று அமைத்து அதற்குள்ளே வில்லன்களோடு விக்ரம் மோதுவது மாதிரி காட்சி.

இந்த சண்டைக் காட்சியை எண்பத்தைந்து ஸ்டில் கமெராக்களில் பதிவு செய்து, பிறகு அதை ஃபிலிம் ஃபாமட்டுக்கு மாற்றுவார்களாம். ரசிகர்கள் புதுமையான ஒரு கோணத்தில் காட்சியைப் பார்த்து ரசிக்கலாம். இந்தச் சண்டைக்கான செலவு ஒன்றே கால்கோடி!

சரியான கும்மாங் குத்துதான்!


'அது'
சிநேகா, அரவிந்த்

## சர்ச்சையைக் கிளப்பும் சத்யராஜ்!



இன்றைய சூழ்நிலையில் டாக் ஆஃப்தி கோடம்பாக்கம் சத்யராஜ்தான்! 'மகாநடிகன்' என்ற ஒருபடம் முடிந்து ரிலீஸுக்குத் தயாராக இருக்கிறது. நடிகன் நாடாள ஆசைப்படுவது தப்பில்லை. அதுக்குத் தகுதி வேண்டாமா? அதை தனக்கே உரிய நக்கலோடு இந்தப் படத்தில் பட்டையைக் கிளப்பியிருக்கிறார் சத்யராஜ்.

நாற்காலிக் கனவு காண்கிற நடிகர்கள் நண்பர்களாக இருந்தாலும் சரி... கவலையேபடாமல் சேட்டை பண்ணியிருக்கிறார் என்கிறார்கள் மகாநடிகன் யூனிட் ஆட்கள். அநேகமாக இந்தப் படம் வந்த பிறகு கோடம்பாக்கத்தில் தீ பிடிக்கும் என்பது நிச்சயம்!

இதற்கு நடுவே இன்னொரு பரபரப்புக்கும் பிள்ளையார்சுழி போட்டிருக்கிறார்கள். யெஸ் – படத்தின் பெயர் 'பெருமாள் சாமி'. 'அய்யர் ஐ.பி.எஸ்' பட்த்தைத் தொடர்ந்து மங்கை அரிராஜன் இயக்கும் இரண்டாவது படம் இது.

இந்தியாவை அதிரவைத்த தூக்குத் தண்டனைக் கைதி தனஞ்செய் சட்டர்ஜியின் கதை. தூக்கில் போட்ட பெரியவர் நாட்டாமுள்ளி, 'இந்த மரணம் என்னை உலுக்கிப் போட்டுருச்சு' என்று தன் மனநிலையை வெளிப்படுத்தியிருந்தார். அதை ஒட்டி பின்னப்பட்ட கதை.

சத்யராஜ் இரு வேடங்களில் நடிக்கிறார். கூடவே அவரது வாரிசு சிபிராஜ். அப்பா, பிள்ளை இரண்டு பேரும் ஜோரா ஜெயிச்சதையும், தூக்குத் தண்டனைக் கைதி பற்றிய தகவலையும் வைத்துக்கொண்டு ரகளை பண்ணப்போகிறார் இயக்குனர் அரிராஜன்!

## செல்லமே


### திரை விமர்சனம்



வருமானவரித்துறை அதிகாரியான விஷாலுக்கு ரீமாசென் மீது காதல் ஏற்படுகிறது. ரீமாவின் பக்கத்து வீட்டில் வசிப்பவர் பரத். ரீமாவை வீட இளை[...] பரத்துக்கும் காதல். ரீமாவை விஷால் திரு[...] கொல்கத்தா சென்றுவிட அங்கு வந்துவிடுகிறா[...] ரீமாவைக் கடத்திச்செல்கிறார். எக்ஸ்பிரஸ் [...] முடிகிறது. அதே வேகத்துடன் மீதிப் பாதியும்[...]

ஹிந்தியில் ஷாருக்கா[...] 'டர்', [...] கொண்டேன்' ஆகிய படங்களை மிக்ஸ் செய்[...] அதை மாற்றித் தந்திருக்கிறார் இயக்குந[...]

ரீமா சென்தான் படத்தின் ஜீவன். க[...] நடிப்புக்கும் இவரைப் பயன்படுத்தமுடியும் [...] படம். பரத்திடம் அன்பு செலுத்துவது, அ[...]



வது, விஷால் மீதான ஈர்ப்பை வெளிப்படு[...] ளுடன் ரீமாவும் மாறுவது - இயற்கை. ரீமா-[...] காதல் பகிர்வு- புதுக் கவிதை.

விஷாலுக்கு இது முதல் படம். பதற்[...] ருக்கிறார். இப்படிப்பட்ட கதைகளில் பரத் மாதி[...] தான் முக்கியத்துவம் இருக்கும். ஆனால் [...] கட்டியிருக்கிறார் விஷால்.

'காதல்கொண்டேன்' தனுஷை ஞாப[...] இன்னும் நன்றாகச் செய்திருக்கலாம். அவ்[...] சிரிப்பலையில் மூழ்கடிக்கிறார் விவேக். ல[...] காமெடியும், நடிகையைத் திருமணம் செய்[...] இளைஞனைப் பற்றிய கமெண்டும் மெ[...] காட்சிகளுக்கு ஹாரிஸ் ஜெயராஜின் இசை[...]

'காதலிக்கும் ஆசையில்லை' பாட[...] கேஷனும் அழகு. 'செல்லக்கிளியோ' பா[...] இடத்தில் நுழைக்கப்பட்ட இடைஞ்சல். கே[...] வும் வி.டி.விஜயனின் படத்தொகுப்பும் பாராட்டு[...] சேர்க்கப்பட வேண்டியவை. படத்தில் அவ்[...] மினி ஃப்ளாஷ் பேக் கா[...]கள்[...]திது.

திரைக்கதை அமைப்பதில் 'பக்[...] கிறார் காந்திகிருஷ்ணா. தமிழ் சினிமாவுக்கு[...] கள்தான் தேவை.

**செல்லமே- பார்க்கலா[...]**

### சிம்ரன் கணவரும் நடிக்கிறார்!




திருமணத்திற்குப் பிறகு முதல்முறையாக சிம்ரன் நடித்து வரும் படம் 'கிச்சா வயது- 16'. இநதப் படததில் சிம்ரனின முறைமாமனாக நடித்துக் கொண்டிருப்பவர் யார் தெரியுமா..


பயபபடாதாகள் சிமரனின கணவர் தபக் பாகாவே தான். ஆம் இதுவரை 3 காட்சிகளில் நடித்து முடித்திருக்கிறார். இவர்கள் இருவரும் ஒரு படத்தில் நாயகன் நாயகயாக நடிக்கவும் பேச்சுவார்த்தை நடநது வருகிறது.

காதல்கோட்டை நாயகியின் தம்பியைக்[...] 'சவுண்டு இல்லாம கிஸ் குடு' எனும் படம் [...] ளோபடியா டைரக்டர். துட்டு இல்லாததா[...] வில்லை! கிடப்பில் கிடந்தது! இப்போது [...] துட்டு சேர்த்துவிட்டாராம். படப்பிடிப்பு அ[...]

# நன்றியுடையோராய் வாழ்வது நல்முன்னேற்றத்தைத் தரும்

## பரமபிதா காட்டியபாதை

நாம் ஒரு செயலில் இறங்கும் போது ஓர் எதிர்பார்ப்போடே செயற்



படுகின்றோம். வேலை செய்பவர் கூலியை எதிர்பார்ப்பதும், கல்வி கற்பவர் பரீட்சையில் சித்தியை எதிர்பார்ப்பதும், விளையாட்டு வீரர் பரிசை எதிர்பார்ப்பதும், உற்பத்தியாளன் நல்ல விளைவை எதிர்பார்ப்பதும் முறையானதே. ஆனால் செய்யாத வேலைக்கு கூலியையோ, எழுதாதபரீட்சையில் சித்தியையோ, உற்பத்தி செய்யாது இலாபத்தையோ ஈட்டிவிடலாம் என்பது வீண் கனவே ஆகும். ஆனால் செய்த நன்மைக்கு கைமாறு எதிர்பார்க்காவிட்டாலும் நன்றி கூறுவதை மனிதன் மட்டும் அல்ல இறைவனும் எதிர்பார்க்கின்றான் என்பதை சமய வரலாற்றுக் கதைகள் எடுத்துக் கூறுகின்றன.

### செயற்கரியன செய்

தொழுநோயாளர்களை சமூகம் ஏற்றுக்கொள்ளாத அக்காலத்தில் அவர்கள் புறம்பான இடங்களிலே தம் வாழ்க்கையை நடத்தினார்கள். அப்படியான ஒரு நாள் இயேசுவை எதிர்கொண்டு வந்து 'ஐயா இயேசுவே எங்களுக்கு இரங்கும்' என்று குரல் எழுப்பி வேண்டினார்கள். இயேசு மனம் இரங்கி உங்கள் குருக்களிடம் சென்று காட்டுங்கள் என்று அவர்களுக்குக் கூறினார். அவர்களும் அவ்வாறு செல்கையில் பத்துப்பேரும் குணமடைந்தார்கள். அவர்களிலே ஒருவன் திரும்பி ஓடி வந்து இயேசுவுக்கு நன்றி கூறினார். இயேசு அவனிடம் மற்றைய 9 பேரும் குணமடையவில்லையா? என்று அங்கலாய்ப்புடன் அவனை வினாவினார்.

தினைத்துனை செய்யினும் பனைத்துணையாக நன்றி சொல்லும் உள்ளம் அனேக அனேகம் பேருக்கு இல்லை என்பதே உண்மை. செய்நன்றி மறக்கின்றவர்கள் தான் ஏராளம். இவர்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டு இருப்பதால் பயன் ஒன்றுமில்லை. நாம் ஒவ்வொருவரும் செயற்படத் தீர்மானம் எடுப்பதன் மூலமே மற்றவர்களை யும் அவ்வாறு செயற்படத்தூண்டலாம்.

### நன்றியால் துதிபாடு

செய்யாத செயலகளால் செயற்கரிய காரியம் செய்திட முடியாது. இயேசுவின் பணி வாழ்விலே அவர் செயல் வடிவக் கற்பித்தலையே மேற்கொண்டார். அதன் மூலமே மற்றவர்களைத் தூண்டினார். பாவியை மன்னித்தார். பசித்தோர்க்கு உணவளித்தார். இறந்தோரை உயிர்ப்பித்தார். இழிந்தோர் எனப்பட்டவர்களுடன் உறவாடினார். சீடரின் பாதங்களைக் கழுவி, பணிவாழ்வுககு அர்த்தம் தந்தார். அவர் போதித்ததைவிட காண்பித்தவைகளே அனேகம். அதிகம் பேசிக் குறைவாய் செயற்படுபவர்களே உயர்வானவர்கள் என்று கருதப்படுகினறார்கள்.

### நன்மாதிரிகள் தேவை

மனிதன் மனிதனாகும் நிலை அருகிக்கொண்டு செல்கின்றது. பண்பாட்டு, மதவழிபாட்டு விழுமியங்கள் கொச்சைப்படுத்தப்படுகின்றன. பேணிக்காககப்படவேண்டிய வழிமுறைகள் தாறுமாறாகச் செயல்படுகின்றன. அவர் செய்வார், இவர் செய்வார் என்ற மன நிலைகளை ஒதுக்கி நாம் அவைகளைவிடாமல் கைக்கொள்ளக் கடைப்பிடிக்க முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும். வியர்க்கும் என்பதற்காக மேலாடை அணியாமல் செல்ல முடியாது இலகு என்பதற்காக அரைகு யாகச் செல்வதும் அசிங்கமானது. அதே போல ஆடையைப் பாதுகாக்க ஆண்டவனை வீழ்ந்து வணங்காமல் நிற்க முடியாது. சுதந்திரச் செயற்பாடுகள மற்றவர்களின்சுதந்திரத்தை மதிச் காமல் இருக்கமுடியாது. நன் முன்மாதிகள் நிச்சயம் மாற்றங்களை ஏற்படுத்தும்.

**அன்ரனி பீற்றர்**

### இயேசுவே சிறந்த எடுத்துக்காட்டு

மாறிவரும் நவீன உலகில் மாற்றங்கள் தேவை ஆனால் மனிதாபிமானம் அதைவிட மேலானது என்பதே இயேசுபெருமான் தம் பணி வாழ்வின் மூலம் எமக்குக்காட்டிச் சென்றார். அவரது வார்த்தைகள் வாழ்வளிக்கும் பொக்கிசமாக இருக்கின்றன. வழிகாட்டும் பாதைகளாக இருக்கின்றன. தினம் அதைப் படித்து தியானிபபதன் மூலம் திரு வாழ்வை நாமும் அடைந்திடுவோம. □

## சிறுவிளம்பரம்

### திருத்தம்

02.10.2004 அன்று வலம்புரிப் பத்திரிகையில் யாழ்ப்பாணம் - மாநகர சபை கேள்வி அறிவித்தல் - 2004 எனும் விளம்பரத்தை நல்லூர் செங்குந்தா பொது சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் எனத் திருத்தி வாசிக்கவும்.

**கலாநிதி க.குணராசா**
**ஆணையாளர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.** (C/626)

### வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழகத் திரைப் படவட்டத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்குப் புவியியற்றுறை மண்டபத்தில் 6 குறுந்திரைப்படங்கள் வீடியோப் படக்காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளன.

சீனிவாசனின் 'சிறகுகள்', சி.எம். ரமேசின் 'வெளிச்சம்', சுஹாசினியின 'காய்ச்ச மரம்', ஜவகரின் 'கல் மண்டபம்', தியாகராஜனின் 'ஜனனம்' மற்றும வசந்தின் 'தங்கையின் மீது நான்கு கண்கள்' ஆகிய படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

இந் நிகழ்வில், ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக செயற்பாட்டு மையத்தினால் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதி உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வன்முறையால் பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் முதிர்கன்னிகள் ஆகியோருக்குத் தையல் இயந்திரம் வழங்கும் வைபவம் நேற்று முன் தினம் யாழ்சமூகசெயற் பாட்டுமைய நிலையத்தில் நடைபெற்றது.

இதற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி எம்.மொறாட்டோ, யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ்.தொழில் துறை வர்த்தக மையத்தின் தலைவர் எம்.இராமதாஸன், யாழ்.தொழில் திணைக்கள உத்தியோகஸ்தர் பி.இராகவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் தெரிவுசெய்யப் பட்ட 23 பயனாளிகளுக்கு தையல இயந்திரங்கள் வழங்கப்பட்டன. அடுத்த வாரம் அளவில் சாவகச்சேரியில் கச்சாய் வீதியில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதிஉதவியுடன் அமைக்க இருப்பதாகவும், விரைவில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாவகச்சேரியில் ஆடைத்தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வேலணை துறையூரில் ஒரு தும்புத் தொழிற்சாலையும் அமைக்கவிருப்பதாக இந் நிறுவன இணைப்பாளர் தெரிவித்தார். (ற-5)

# ஹெல உறுமயவின் உட்பூசலுக்கு கட்சியின் நிறுவுனரே காரணம்

## உடுவே தம்மாலோக தேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவிற்குள் ஏற்பட்டுள்ள உட பூசல் காரணமாக அக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கொலன்னாவ ஸ்ரீ சுமங்கள தேரர் நேற்று முன்தினம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடிய போது சமுகமளிக்காத அவர், சபை அமர்வு முடிந்த பின்பு அங்கு சமுகமளித்து பாராளுமன்றச் செயலாளர் நாயகம் திருமதி சிறியாணி விஜயசேகரவிடம் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்தார்.

கச்சிக்குள் பல பிரச்சினைகள் இருந்தாலும் அதற்கும் தமது பதவி விலகலுக்கும் எதுவித தொடர்புகளும் இல்லையென கொலன்னாவ ஸ்ரீசுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் இது தொடர் பில் கருத்துரைக்கையில், சில விடயங்களைத் தெளிவுபடுத்தவேண்டிய தேவை இருக்கின்றது.

ஆனால், அதற்கு போதிய கால அவகாசம் தேவை. ஏற்கனவே சிஹல உறுமய என்ற பெயரில் செயற்பட்ட ஜாதிக ஹெல உறுமயவில் 9 பௌத்த பிக்குமார்கள் பாராளுமன்றக்கிற்கு இம் முறை தெரிவுசெய்யப்பட்டனர். எமது கட்சிக்குள் தற்போது ஏற்பட்டுள்ள உட்பூசலுக்கு எமது கட்சியின் நிறுவுனரே காரணமாகுமெனத் தெரிவித்தார். (ற-121)

# தென்மராட்சி கல்வி வலயத்தின் சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, தென்மராட்சி கல்வி வலயத்தால் பாடசாலை மாணவர்களிற்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டுரைப்போட்டி (கீழ்ப்பிரிவு)**

1 ஆம் இடம் - வி.கௌசல்யா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
2 ஆம் இடம - த.அஜந்தன், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.
3 ஆம் இடம் - வ.சோபிகா, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

**(கனிஸ்ட பிரிவு)**

1 ஆம் இடம் - ஜெ.ஜீவகன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
2 ஆம் இடம் - செ.துசிந்தா, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்.
3 ஆம் இடம் - கோ.சசீதா, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

**(மேற்பிரிவு)**

1 ஆம் இடம் - க.கிபேதிகா, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
2 ஆம் இடம் - ந.சுபோதனா, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
3 ஆம் இடம் - வ.பிரதீபா, வறணி மகாவித்தியாலயம்.

**கவிதைப்போட்டி (கனிஸ்டபிரிவு)**

1 ஆம் இடம் - எஸ்.சதுர்ஷியா, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
2 ஆம் இடம் - க.மயூரி, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.
3 ஆம் இடம் - செ.வெனிஸ்ரா, விடத்தல்பளைகமலாசினி வித்தியாலயம்.

**மேற்பிரிவு**

1 ஆம் இடம் -சி.றஜிதாஸ, நாவற்குழி மகாவித்தியாலயம்.
2 ஆம் இடம் -டா.சாலினி, மீசாலை விக்னேஸவரா மகா வித்தியாலயம்.
3 ஆம் இடம்-செ.சர்மிளா,கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

வெற்றியீட்டியோர் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். (ப-127)

# வடமராட்சிக் கிழக்கிற்கான மின்விநியோகப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான மினசார விநியோகப் பணிகளைத் துரிதபபடுத்துமாறும் அம்பன் பகுதி வரை விரைவாக மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப பகுதியில் உள்ள மருதங்கேணி, செம்பியன்பற்று பகுதிகளுககும விரைவில் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அத்துடன், எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் துரிதகதியில் இதற்கான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களால் முன்னெடுக்கப் படாவிட்டால் இப்பகுதியில் இருந்து மேற்கொள்ளப்படும் மணல் விநியோகத்தை இடை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ற-43)


# கூறுவிலை கோரல்

**இலங்கை மின்சார சபை, பிரதிப் பொது முகாமையாளர் வடமாகாண அலுவலகத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் வசதிகளுடைய ஓர் கட்டிடம் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.**

1. 8975 சதுர அடிக்கு குறையாத கட்டிட நில விஸ்தீரணமுடையதாக இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
3. நீர் வசதியுடன் 50 பேர் உபயோகிக்கக் கூடிய மலசல கூட வசதி உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
4. சுமாராக 15 வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடிய தான இடவசதி உள்ளதாக இருத்தல்வேண்டும்.
5. குறைந்தது 5 வருடங்கள் பாவனை செய்யக் கூடியதாக ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பமாக இருத்தல் வேண்டும்.

**மேற்படி வசதிகளையுடைய கட்டிட உரிமையாளர்கள் தங்கள் கூறுவிலைகளை கட்டிட உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 2004.10.22 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்னதாக எனக்குக் கிடைக்கும்படி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**பிரதிப் பொது முகாமையாளர்,**
**பி.பொ.மு.(வடக்கு) அலுவலகம்,**
**இலங்கை மின்சார சபை,**
**536/1, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல.021-222 2496**

**"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை"**

(C/625)

# லெப்.கேணல் நிரோஜனின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(முல்லைத்தீவு)

மன்னார் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்.கேணல் நிரோஜனின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், "அலைபாடும் பரணி" பாடல் தொகுதி வெளியீட்டு விழாவும் கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் ரங்கன் தலைமையில் நேற்றுமுன் தினம் இரவு 7.30 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இந் நிகழ்வின் பொதுச் சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான சலீம் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றி வைத்தார்.

மாவீரர் நிரோஜனின் திருவுருவப் படத்திற்கான ஈகைச்சுடரை அவரது பெற்றோர் ஏற்றி வைத்து மலர் மாலையினையும் அணிவித்தனர்.

தொடர்ந்து கடற்புலிகளின் மகளிர் அணியினரின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து நிதர்சனம் போராளி வீரா தலைமையில் "அலைபாடும் பரணி" பாடல் தொகுதி வெளியீட்டு விழா நிகழ்வு நடைபெற்றது.

வரவேற்புரையினை நிதர்சனம் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் பிறேமிளா நிகழ்த்தினார். சிறப்புரையினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார்.

வெளியீட்டுரையினை நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் நிகழ்த்தினார். இதன் முதற் பிரதியினை கடற்புலிகளின் சிறப்பத் தளபதி கேணல் சூசை வெளியீட்டு வைக்க கப்டன் ரஞ்சனின் தாயார் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை கடற்புலிகளின் சிறப்புப் படையணித் தளபதி பைந்தமிழ், தளபதி சலீம் தளபதி கவி, கப்பல் கட்டு மானப் பகுதியைச் சேர்ந்த ஆரதி, கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் மற்றும் தளபதி ஸ்டீபன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

மதிப்பீட்டுரையினை வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (ற-121)

# லெப்.கேணல் விக்டரின் சிலை அமைப்பதற்குப் படையினர் தடை

(மன்னார்)

மன்னார் மாவட்டத் தளபதியாக இருந்து வீரச்சாவடைந்த கேணல் விக்டரின் திருவுருவச் சிலை அமைக்கும் மக்களின் முயற்சியினை மன்னாரில் உள்ள படைத் தரப்பினர் தடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்ட மக்கள் ஒன்றிணைந்து மன்னார் நகரில் லெப். கேணல் விக்டருக்கு உருவச் சிலை ஒன்றை அமைப்பதற்காக முன் ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளை, படையினர் குறுக்கிட்டு இப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என தடுத்து நிறுத்தியதாகத் தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை சிலை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே படையினர் இவ்வாறு தடுத்துள்ளனர். இதனையடுத்து ஆத்திரமடைந்த மன்னார் மக்கள் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

தமக்கு ஏற்பட்டுள்ள இந்த இடையூறு நிலைமையை அகற்றுமாறு அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளதுடன், எவ்வாறாயினும் பொது மக்களால் லெப்.கேணல் விக்டரின் திருவுருவச் சிலை அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-121)

# முன்னாள் அமைச்சருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் நெருஞ்சாலைகள் அமைச்சர் எச்.ஜி.பி.ஹெறல்நெல்சன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ.விஜயதுங்க ஆகிய இருவருக்கும் எதிராக கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை ஒப்படைக்கவில்லையென்ற குற்றச்சாட்டில் அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

இவ்விருவரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தை ஒப்படைக்காத முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான டி.எம்.பண்டாரநாயக்க, சிட்னி ஜெயரத்ன, அஜித்குமார பெத்தேகம, நீல்ரூப சிங்க மற்றும் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு அவர்கள் வாசஸ்தலங்களை ஒப்படைத்ததையடுத்து வாபஸ் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-121)

# கிராமப்புற மின்வியோகத் திட்டத்திற்கு சுவிஸ் அரசு 2கோடி டொலர் கடனுதவி

(கொழும்பு)

கிராமப் புறங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டங்களை மேற்கொள்வதற்கென 2கோடி அமெரிக்க டொலர்களை சுவிஸ் அரசாங்கம் கடனாக வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.வி.ஜெய சிங்கவும் சுவிஸ் அரசின் சார்பில் சுவிஸ் தூதுதரகப் பொறுப்பதிகாரியும் கைச்சாதிட்டுள்ளனர்.

இந்த நிதி ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் இலங்கை அரசுக்கு வழங்கப்படவுள்ளது. 6வருட சலுகைக் காலம் உட்பட 13ஆண்டுகளில் இந்தத் தொகையைத் கூடிய வகையில் இக் கடனுதவி வழங்கப் பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் கடனுக்கு வட்டி செலுத்த வேண்டியதில்லை.

நாடாளவிய ரீதியிலுள்ள 268 கிராமங்களிலுள்ள சுமார் 43 ஆயிரத்து 550 வீடுகளுக்கு மின்சாரம் வழங்க இந்த நிதி பயன்படுத்தப் படவுள்ளது.

இந்த கடன் திட்டத்தின் காலம் சிறு நடுத்தர கைத் தொழில்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

# அச்சுவேலி வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் வைத்தியர்கள் எழுதி வழங்கும் மருந்து வகைகளை வெளிக் கடைகளில் வாங்க வேண்டிய அவலநிலை காணப்படுகிறது.

இவ் வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்து வகைகளை அனுப்பிவைக்க சுகாதாரத் திணைக்களம் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென நோயாளர்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-56)

# நடமாடும் செயலக சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/68 றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் போன்ற வற்றுக்கான நடமாடும்செயலக சேவையொன்று எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு றெக்கிள மேசன் கிழக்கில் அமைந்துள்ள தொடர்மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது

சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமுகமளித்து, இச்செயன்முறையின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார்.

ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்கமாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பங்கீட்டட்டை, குடும்ப அட்டைகளை கொண்டு வந்தால் கருமங்களை இலகுவாக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# எரிபொருட்களின் விலையை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை மீண்டும் அதிகரிப்பதற்கான அனுமதியினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

டீசல் விலையை ஒரு லீற்றர் 6 ரூபாவாலும் மண்ணெண்ணெயின் விலை 16 ரூபாவாலும் அதிகரிப்பதற்கான விண்ணப்பத்தினையே அரசிடம் சமர்ப்பித்துள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஜாலியமாதகம தெரிவித்துள்ளார்.பெற்றோலுக்கான விலையை அதிகரிக்குமாறு நாம் கோரவில்லை.

அரசாங்கக் கூட்டுத்தாபனத்திற்கு மானியம் வழங்கும் பட்சத்தில் மண்ணெயின் விலையை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

# ஓய்வு

(பருத்தித்துறை)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை. வைரமுத்து 41 வருட அரசாங்க சேவையிலிருந்து கடந்த 18 ஆம் திகதி முதல் இளைப்பாறியுள்ளார்.

கொழும்பு தொழிற் திணைக்களம், கொழும்பு கச்சேரி, வவுனியா கச்சேரி நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் யாழ்ப்பாணம் கச்சேரி,கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பூநகரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் சிறந்த பணியாற்றி பொது மக்களின் நன்மதிப்பையும் உயரதிகாரிகளின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்ட இவர் இளைப்பாறியதையடுத்து பூநகரி உதவி அர சாங்க அதிபராக எஸ். ஸ்ரீகாந்த குமார் நியமிக்கப்பட்டுப் பொறுப் பேற்றுள்ளார்.(ப-52)

# சமாதானம் குறித்த கலந்துரையாடல்

சமாதானத்தை ஏற்படுத்துவதில் இளம் சமுதாயத்தினரை ஈடுபடுத்தல் எனும் விடயம் தொடர்பாக அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்துள்ள ஜோய், மோவுஸ் கவினி, மண்டி ஆகியோர் இளைஞர் யுவதிகளுக்கு விளக்க மளிக்கும் தொடர் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர்.

இத்தொடரில் மூன்றாவது கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் இலங்கை வாழ் பல்வேறு சமூகத் தினரும் ஒன்றாகக் கூடி பல களப் பயிற்சிகளில் ஈடுபடுவதுடன் சமாதானமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதான பல பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.இப் பயிற்சியில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இருந்து பல பெண்கள் கலந்து கொள்ளவுள்ளதோடு சமாதானச் செயற்பாட்டிலும் அவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். (ற)

# பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம் மேலும் விஸ்தரிப்பு

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தற்போது அமுலிலுள்ள சத்துணவுத் திட்டம் மேலும் விஸ்த்தரிக்கப்படுமென மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போது இத்திட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள 120 பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால் சுமார் 24ஆயிரம் மாணவர்கள் நன்மை பெற்றுவருகின்றனர்.இந்தத் திட்டம் அமுல்படுத் தப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை 19 கல்விப் பிரிவுகளுக்கு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முதலாம் ஆண்டு மாணவர் ஒருவருக்கு 15 ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் நன்மையடைவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-121)

# பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவை வருமாறு:

**கீழ்ப்பிரிவு**

1. ஆம் இடம்:- ஜெனித்தா. கணேசலிங்கம்
2. ஆம் இடம்:- தர்சிகா. தங்கராஜா
3. ஆம் இடம் சர்ஜனா. ராஜமோகன்

**மத்திய பிரிவு**

1. ஆம் இடம்:- கோகிலவாணி நந்தபாலன்
2. ஆம் இடம்:- சபாபிரியதர்சினி.சிவரத்தினம்
3. ஆம் இடம்:- அபிரா. வேலாயுதம்

**மேற்பிரிவு**

1. ஆம் இடம்:-கேதீஸ்வரி சத்திவேல்
2. ஆம் இடம்:- தர்மினி பாலச்சந்திரன்
3. ஆம் இடம்:- விஜிதா ஸ்ரீநடராஜன்


**அதிமேற்பிரிவு**

1. ஆம் இடம்:- சாயினி. இராஜசேகரம்
2. ஆம் இடம்:- மயூரி. செல்வரத்தினம்

சுபா . பாலேந்திரன்

3. ஆம் இடம்:- சசிகுமார் சுசிந்திர மோகன்.

(ப-52)




ஊடக வளங்கள் மற்றும் பயற்சி மையத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள இதழியல் டிப்ளோமா கற்கை நெறி நேற்றைய தினம் யாழ்.சிற்றிஹோலில் வைபவரீதியாக ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தொடக்கவுரை ஆற்றுவதையும், யாழ்.பல்கலைக் கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்





உலக அஞ்சல் தினத்தையொட்டி நேற்றைய தினம் யாழ். அஞ்சல் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில். யாழ். அஞ்சல் அலுவலக கணக்காளர் திருமதி எஸ்.கலைச் செல்வன், பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட மக்கள் வங்கி முகாமையாளர் இளம்பிறைநாதன், வடமாகாண அஞ்சல்மா அதிபர் என்.ஜெயரத்தினம், மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜ சிங்கம், முன்னாய்வுப் பரிசோதகர் எஸ்.ஜெபரட்ணம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதனையும் மக்கள் வங்கி முகாமையாளர் இளம் பிறைநாதன் போட்டியில் வெற்றி பெற்ற ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். படங்கள்: சிவசங்கர்

லமே
விமர்சனம்




துறை
லுக்கு
ஏற்ப
கத்து
ரத். ரீமாவை வீட இளையவர். ரீமாவின் மீது
ரீமாவை விஷால் திருமணம் செய்துகொண்டு
விட அங்கு வந்துவிடுகிறார் பரத். நேரம் பார்
சல்கிறார். எக்ஸ்பிரஸ் வேகத்தில் பாதி படம்
கத்துடன் மீதிப் பாதியும் முடிவதுதான் சிறப்பு.
ாருக்கா 'டர்', ிழில் தனுஷின் 'காதல்
படங்களை மிக்ஸ் செய்த கதைதான். ஆனால்
ந்திருக்கிறார் இயக்குநர் காந்திகிருஷ்ணா.
ன் படத்தின் ஜீவன். கவர்ச்சிக்கு மட்டுமில்லை
பயன்படுத்தமுடியும் என்பதை நிரூபிக்கிறது
அன்பு செலுத்துவது, அவரைக் கடிந்துகொள்



ான ஈர்ப்பை வெளிப்படுத்துவது என காட்சிக
றுவது - இயற்கை. ரீமா-விஷால் தம்பதியினரின்
க் கவிதை.
இது முதல் படம். பதற்றம் இல்லாமல் செய்தி
ட்ட கதைகளில் பரத் மாதிரியான ரோல்களுக்குத்
ம் இருக்கும். ஆனால் இதில் பரத்தை ஓரம்
ிஷால்.
ன்டேன்' தனுஷை ஞாபகப்படுத்தாமல், பரத்
செய்திருக்கலாம். அவ்வப்போது தியேட்டரை
கடிக்கிறார் விவேக். லஞ்சம் பற்றிய அவரது
யைத் திருமணம் செய்யும் ஆசையில் வரும்
றிய கமெண்டும் மெசேஜ். விறுவிறுப்பான
ரிஸ் ஜெயராஜின் இசையும் ஈடுகொடுக்கிறது.
ஆசையில்லை' பாடலும் அந்த லொக்
'செல்லக் கிளியோ' பாடல் தேவையில்லாத
ப்பட்ட இடைஞ்சல். கேவி ஆனந்தின் ஒளிப்பதி
படத்தொகுப்பும் பாராட்டு லிஸ்ட்டில் கண்டிப்பாக
டியவை. படத்தில் அவ்வப்போது வந்துபோகும்
பக் கார்டுகள் புதிது. ரசனைக்குரியவை.
தை அமைப்பதில் 'பக்காவா'க செயல்பட்டிக்
ணா. தமிழ் சினிமாவுக்கு இவரைப் போன்றவர்

## லமே- பார்க்கலா(ம்)மே!

ரும்
குப்
ாக
ரும்
16'.
ின
டித்
வர்
ின
வே
ரை
த்து
இவ
டத்
ாக
வார்
து.




டை நாயகியின் தம்பியைக் ஹரோவாக வைத்து
கிஸ் குடு' எனும் படம் தொடங்கினார் என்ஸைக்
டர். துட்டு இல்லாததால கஸ குடுக்க முடிய
கிடந்தது! இப்போது அங்கே இங்கே புரட்டி
டாராம். படப்பிடிப்பு ஆரம்பமாகப போகுது.

## சரத்குமார் இரட்டை வேடங்களில் நடிக்கும்

# ஐயா





'சாமி'யைத் தொடர்ந்து மீண்டும் கவிதாலயம் தயாரிக்கும் படம் 'ஐயா'. இதன் கதை, திரைக்கதை, வசனம் டைரக்ஷன் பொறுப்புக்களை ஹரி ஏற்றுள்ளார். சரத்குமார் இரண்டு வேடங்களில் நடிக்கிறார்.

பிரகாஷ்ராஜ், நெப்போலியன் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். வடிவேலு, மாளவிகா, சிந்து, காந்திமதி, சங்கீதா, சாலி, கவிதாலயா கிருஷ்ணன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

இது ஒரு குடும்பப் படம். ஐயாவாக நடிப்பவர் சரத்குமார். அன்பால், பாசத்தால் மனிதநேயத்தால் எதையும் சாதிக்க முடியும் என்று கருதுபவர். அவருக்கு ஜோடியாக நடிப்பவர் லட்சுமி. அவர்களுக்கு மகனாக நடிப்பதும் சரத்குமார்தான். அவர் விளையாட்டு வீரர். அவருக்கு ஜோடி மலையாள முன்னணி நடிகை நயன்தாரா. ஊரில் எல்லா ஜாதிக்காரர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய குணம், போக்கு மாறுபட்டிருந்தாலும் ஒற்றுமையுடன் இருக்கிறார்கள். அப்புறம் பிரச்சினை எப்படி வருகிறது? ஒரு குடும்பத்தின் தலைவரான பிரகாஷ் ராஜும் இன்னொரு குடும்பத்தின் தலைவரான நெப்போலியனும் அதற்குப் பொறுப்பனவர்களா? 'ஐயா' இந்தக் கேள்விகளுக்கு விளக்கமாகப் பதில் அளிக்கும்.

வைகைப் புயல் நடிகர் சாயல் கொண்ட 'குமார' காமெடி நடிகர் வசூல்டாக்டர் படத்தில் நடித்தார். அப்போது இளைய திலகம் 'உனக்கு ஏதாவது உதவி பண்ணனும்னு நினைக்கிறேன்! என்ன வேணும்னு கேளு' என்க "நான் ஸே.ஃ.ப்டியா கிற மாதிரி ஏதாவது கொடுங்கண்ணே' என்றிருக்கிறார்.

மறுநாள் பெரிய பொட்டலத்தைத் தந்தார் இளையதிலகம். பிரிச்சா உள்ளே... காஸ்ட்லீயான ஹெல்மெட்! 'என்னண்ணே?' 'நீதானடா ஸே.ஃ.ப்டியா வேணும்னு கேட்ட' என்க ஒரே சிரிப்பலை! அந்தத் தலைக் கவசத்தோடு அலைகிறார் காமெடியன்.




## 'திறமையை' நிரூபித்த ரகஸியா

'வசூல் ராஜா எம்.பி.பி. எஸ்' படத்தில் அறிமுகமானவர் ரகஸியா. முதல் படத்திலேயே முற்றும் துறந்திருந்தார். அவர் ஆடிய பாடல் காட்சியை சென்ஸார் குதறிப்போட்டாலும் அதற்கு முன் படத்தைப் பார்த்த திரைப்பட புள்ளிகளுக்கு இனிய அதர்ச்சி. உடனே ரகஸியாவைப் பிடித்தார்கள். தங்கள் படங்களில் கமிட் செய்தார்கள்.

அதைவிட அதிசயம் என்ன தெரியுமா? ஷூட்டிங் முடிந்து போன 'எம் குமரன் சன் ஆஃ.ப் மகாலட்சுமி' படத்தில் ரகஸியாவுக்காக ஒரு பாடல் காட்சியை இணைத்திருக்கிறார்கள். அந்தப் பாடலில் வழக்கம் போல் தன் 'திறமையை' நிரூப்பித்துள்ளாராம் ரகஸியா.

'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' படத்தில் அறிமுகமான அபர்ணா இப்போது கன்னடப் பட உலகில் கால்பதித்திருக்கிறார்.

மாநிற ஹீரோயின்களுக்கு எப்போதுமே அங்கு மவுசு உண்டு. அதோடு அபர்ணா முறையாக நடனம் கற்றவர். அதனால் அசதி பார்க்காமல் ஆடுகிறாராம். இந்த ஆட்டங்கள் பலரைக் கவர்ந்திருப்பதாகக் கேள்வி.

# ரஜினியின் 'சந்திரமுகி' ரகசியம்!



சிவாஜி ஃ.பிலிம்ஸில் ரஜினி நடிக்கிறார் என்றதுமே ரசிகர்களிடம் மட்டுமன்றி திரையுலகிலும் பரபரப்பு தொற்றிக்கொண்டுவிட்டது. சிவாஜி ஃ.பிலிம்ஸ் சார்பில் நடிகர் பிரபு தயாரிக்க, திரைக்கதை, வசனம் எழுதி பி.வாசு இயக்க, ரஜினி நடிக்கும் அந்தப் படத்துக்குப் பெயர் 'சந்திரமுகி'.

மலையாளத்தில் சூப்பர் ஹிட்டாக ஓடிய மணிச்சித்ரதாழ் படத்தின் கதையை வலதுகை, ஆறாவது விரல், புண்ணியவான் என சில தலைப்புகளில் தேர்வுசெய்து விஜயகாந்திடம் சொன்னார் பி.வாசு. ஆனால் இது கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதையாக இருக்கிறது என்று தவிர்த்துவிட்டார் விஜயகாந்த்! அதன்பிறகு ஆப்தமித்ரா என்ற பெயரில் இந்தக் கதையைக் கன்னடத்தில் பண்ணினார் பி.வாசு. அது மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுவருகிறது.

சமீபத்தில் பெங்களூரில் தங்கியிருந்த ரஜினி இந்தப் படத்தைப் பார்த்தார். அவருக்கு மிகவும் பிடித்துப்போய் விட்டது.

**சிவாஜி ஃ.பிலிம்சிற்காக நடிக்க ஒப்புக்கொண்டது எப்படி?**

சிவாஜி ஃ.பிலிம் சார்பில் பிரபு தயாரிக்க ரஜினி - பி.வாசு கூட்டணியில் வந்த 'மன்னன்' படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது. 'படையப்பா' படத்தின்போது யார் யாரோ கோடி சம்பளம் வாங்குறாங்க, நடிகர்களுக்கே திலகம் நீங்க. இந்தாங்க ஒருகோடி ரூபாய் என சிவாஜிக்குச் சம்பளம் கொடுத்தார் ரஜினி. இதில் நெகிழ்ந்துபோன சிவாஜி மன்னன் மாதிரி இன்னொரு படம் எங்க பேனருக்கு பண்ணிக் கொடு ப்பா என ரஜினியிடம் சொல்லியிருந்தார். சமயம் வரும்போது நிச்சயம் பண்ணுவேன் என ரஜினியும் சொல்லியிருந்தார்.

சிவாஜி மறைவுக்குப்பின் அவரின் முதலாமாண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொள்ள அன்னை இல்லம் போயிருந்தார் ரஜினி. அப்போது 2004இல் சிவாஜி ஃ.பிலிம்ஸின் பொன்விழா எனச் சொல்லிய சிவாஜியின் மூத்தமகன் ராம்குமார் எங்களுக்கு ஒரு படம் பண்ணித்தரணும் என கேட்டுக்கொண்டார்.

சிரித்தபடியே போய்விட்டார் ரஜினி. அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் இப்போது தெரிந்திருக்கிறது. குருவாயூர் கோவிலில் குடும்பத்தோடு சாமி கும்பிடப்போயிருந்த பி.வாசுவின் செல்போன் ஒலிக் கிறது. எடுத்துப் பேசினால் எதிர்முனையில் ராம்குமார்.

'ஆப்தமித்ரா' படம் ரஜினி சாருக்குப் பிடித்துவிட்டது. சிவாஜி ஃ.பிலிம்ஸ் பேனரிலேயே தயாரிக்க ஒப்புக்கொண்டுவிட்டார். உடனே கிளம்பிவாங்க.

சந்தோஷத்தில் பறந்து வந்தார் பி.வாசு. ரஜினியைச் சந்தித்தார். மளமளவென வேலைகள் ஆரம்பமாகியது.


ரஜினியும் பிரபுவும் குருசிஷ்யன், தர்மத்தின் தலைவன் படங்களில் சேர்ந்து நடித்து கலக்கியிருக்கிறார்கள். 'சந்திரமுகி' படம் மூலம் மீண்டும் கலக்கப்போகிறார்கள்.

# நடிகையின் அதிரடி

'உள்ளக் கடத்தல்' படப்பிடிப்புக்காக கொடைக்கானல் வரை சென்றுவிட்டு, சொல்லாமல் கொள்ளாமல் அபிதா சென்னைக்கு ஓடிவந்தது பழைய கதை. இப்போது படத்தின் தயாரிப்பாளர், 'நடிகையின் அதிரடியால் படப்பிடிப்பு பாதிக்கப்பட்டு தனக்கு பன்னிரெண்டு லட்சம் ரூபாய் நஷ்டம்' என்று தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் செய்திருக்கிறார்.. நஷ்டஈடும் கேட்டிருக்கிறார்.

அபிதாவோ 'தனக்குச் சம்பளமாகப் பேசியதே வெறும் ஐம்பதாயிரம் ரூபாய் தான்' என்றும், படத்தின் ஒட்டு மொத்தத் தயாரிப்புச் செலவையும் தனது தலைமேல் சுமத்த நினைக்கிறார் தயாரிப்பாளர் என்றும் நடிகர் சங்கத்தில் புகார் கொடுத்திருக்கிறா ராம்.

சரியான லடாய் தான்!



'விஸ்வதுளசி'
மம்முட்டி, நந்திதாதாஸ்

# பலூஜா நகர் மீது அமெ.படைகள் தாக்குதல்
# 20 பேர் உயிரிழப்பு 100 பேர் படுகாயம்

(பலூஜா)

ஈராக்கில் பலூஜா நகரத்தின் மீது அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்தியதில அப்பாவி மக்கள் 20 பேர் பலியாயினர். 100 ற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.



ஈராக்கில் சதாம் வீழ்ந்த பின்னர் அமெரிக் கப் படைகள் தொடர்ந்து அங்கே யே தங்கியுள்ளன. இந்த படைகளை வெளி யேறக் கோரி சதாம் ஆதரவு கொரில்லா படை யினர் இடங்களில் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க முகாம்கள் மீதும், வெளி நாட்டினர் தங்கியுள்ள் ஹொட் டல்கள் மீதும் கார் குண்டு தாக்குதலை நடத்தி பெருத்த சேதத்தை விளைவித்தும் வரு கின்றனர்.

இவர்களை ஒடுக்குவதற் காக, அமெரிக் கப் படைகளும் தீவிரவாதப் போராளிகளை இலக்கு வைத்து பரவலாகத் தாக்குதல் களை நடத்தி வரு கின்றனர்.

அந்த அடிப்படை பலூஜா நகரததின் மீது அமெரிக்க படை கள் தாக்குதலை தொடர்ந்து வருகின்றன்.

கடந்த வியாழக் கிழமை நள்ளிரவு அமெரிக்க கூட்டணி படைகள் பலூஜா நகரத்தின் மீது அதிரடி தாக்குதல் நடத்தி யதில் குழந்தைகள், பெண்கள் உள்பட 20 பேர் பலியாயினர் 100 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருந்த போதிலும் அமெரிக்கப்படைகள் தொடர்ந்தும் தாக்குதலை நடத்தி வருகின்ற னர். பதிலுக்கு தீவிரவாதிகளும் தாக்குதல் களை நடத்தி வருக்கின்றனர். (ப)




## சமாதானத்திற்கான நோபல் பரிசு

(கென்யா)

2004 ஆம் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசு கென்யாவின் சுற்றுச் சூழல் ஆர்வலர் வாங்காரி மாதாய்க்கு கிடைத்தள்ளது.

64 வயதானவர் அந்த நாட்டின் சுற்றுச் சூழல் துறை துணை அமைச்சராகவும் இருக் கிறார்.

கென்யாவில் உள்ள நார்வே தூதர் தொலைபேசியில்தொடர்பு கொண்டு இத் தகவலைத் தெரிவித்ததாக மாதாய் தெரி வித்தார்.

நோர்வே செய்தி நிறுவனம் என்.டி.பி.யும் இத் தகவலை உறுதி செய்தது. சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை வளத்துறைணை அமைச்சரான மாதாய் இந்தப் பரிசை பெறும் மதலாவது ஆப்பிரிக்கப் பெண்மணி அவார்.



பிலிப்பின்ஸ் நாட்டின் மணிலா நகரில் நடைபெறும் புவியுலக அழகிக்கான போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்கும்

# குழந்தைகளைப் பாதிக்கும் இரசாயனக் கழிவுகள்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல பொருள் களில் அடங்கியுள்ள ரசாயனங்களால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிக்கப் படுகின்றது என்று ஆய்வுகளின் மூலம் தெரி யவந்துள்ளது.

இதுகுறித்து உலக இயற்கை நிதியத் தின் ஆய்வின் முடிவுகள் பற்றி இந்த அமைப்பின் பிரதி நிதியான அனிதா பந்த் கூறியதாவது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல பொருள்களில் விஷத்தன்மை வாய்ந்த இராசாயனங்கள் கலந்துள்ளன.

விடியோ, தொலைக்காட்சி, கணனி, கார் இருக்கைகள், பிளாஸ்டிக் சாமான்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், எலெக்ட்ரானிக் கழிவுகள் ஆகியவற்றில் பல இரசயானப் பொருள்கள் கலந்துள்ளன.

இந்த இரசாயனப் பொருள்கள் காற்று மண்டலத்திலும் நீரிலும் மண்ணிலும் கலந்து உணவுப் பொருள்களிலும் கலந்து விடுகினறது. இதனால், வளரும் குழ்ந்தை கள் மட்டு மின்றி தாயின் கருவில் இருக்கும் குழந்தை களும் பாதிக்கப்படுகிறார்கள்.

குழந்தைகளின் ஞாபக சக்தி, கவனம் செலுத்தும் திறன், பொருள்களை அடையா ளம் காணும் ஆற்றல், இயங்கும்திறன், அறிவுக் கூர்மை ஆகியவை குறைகின்றன இதனால் மன வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது.

பெண்கள் சாப்பிடும் பொருள்களில் இருந்து அவர்களின் உடலில் தேங்கிவிடும் இராசாயன பொருள்கள் அவர்கள் கருவுறும் போது குழந்தைகளின் உடலிலும் பரவுகிறது. இதனால், குழந்தைகளுக்கு புற்றுநோய் ஏற்படுவதும் அதிகரித்து வருகிறது.

இரசாயனப் பொருள்களால் குழந்தை களின் வளர்ச்சி தாமதமாவதோடு எடையும் குறைகிறது. இரசாயன கழிவுகள் நிறைந்த இடத்தில் வேலை பார்ப்பவர்களும் அவர் களின் குழந்தைகளும் அதிகம் பாதிக்கப் படுகிறார்கள்.

இதுவரை 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராசாயனப் பொருள்கள் உருவாக்கப்பட்டுள ளன. மனிதர்களின் மூளையிலும் நரம்பு மண்டலத்திலும் அவற்றால் என்ன விளைவு கள் ஏற்படும் என்பது குறித்து முழுமை யாக இதுவரை அறியப்பட வில்லை. எனினும் ஆது பாரதூரமானது என்பது உண்மை.

நாம் உருவாக்கியுள்ள இரசாயனங்கள் நம்மைச் சூழ்ந்துள்ளன. அவற்றால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து இன்னும் நாம் முழுமையாகத் தெரிந்த கொள்ளவில்லை என்றார் அனிதா பந்த். (ப)

## பாகிஸ்தானின் முல்தானில் நடத்தப்பட்ட
# பேரணியின் போது வெடித்த வன்முறைகளில் 42 பேர்பலி; 100ற்கும் மேற்பட்டோர் காயம்

(முல்தான்)

பாகிஸ்தானின் முல்தான் நகரில் அரசுக்கு எதிராகவும், ஷியா முஸ்லிம்களுக்கு எதிரா கவும் சின்னி முஸ்லிம்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர் இதன் போது இடம் பெற்ற வன்முறைகளில் 45 பேர் பலியானது டன் 100 ற்கும் அதிகமானோ் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் பெரும்பான்மையாக உள்ள சின்னி முஸ்லிம்களுக்கும், சிறு பான் மையினராக உள்ள ஷியா முஸ்லிம் களுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு ஏராள மானவர்கள் பலியாவது வாடிக்கை யாகி விட்டது.

கடந்த 2 ஆம் திகதி சியோல் கோட்நகர மத்தியில் ஷியா முஸ்லிம்கள் தற் கொலை தாக்குதல் நடத்தியதில 30 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினமும் முல் தான் நகரில் சின்னி முஸ்லிம்கள் நடத்திய பேரணியில் இரண்டு குண்டுகள் வெடித்தது இதில் 42 பேர் பலியாயினர் நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர்.

குண்டு வெடிப்புகள் மூலம் இரு பிரிவினரும பழி வாங்கும் போக்குடன் நடந்து கொள்வ தால், மத ரீதியான ஊர்வலயங்கள், கூட்டங் களுக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

இருப்பினும், நேற்று முல்தான் நகரில் சின்னி முஸ்லிம்கள் ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஆயி ரக்கணக்கானோர் அரசுக்கும், ஷியப முஸ் லிமகளுக்கும் எதிராக கோஷமிட்டபடி சென் றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிலர் வன்முறையில் ஈடுபட்டனர். கடைகளை அடித்து நொறுக்கிய இந்த கும்பல் வழியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கு தீ வைத்தது. இதனால் இங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். (ப)



பங்களா தேஷிற்கு சொந்தமான இந்த விமானம் தலைநகர் டாக்கா விமான நிலையத்தின் ஓடுபாதையில் வரும் போது. பாதையை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகி சிறிய ஆறு ஒன்றிற்கு அண்மையில் வீழ்கின்ற காட்சி.

# சீனாவின் பொது துறை வங்கியில் இருந்து 41.85 லட்சம் ரூபாவை திருடிய மாணவர்கள்

(பெய்ஜிங்)

சீனாவின் மிகப் பெரிய பொதுத்துறை வங்கியின் கணக்கிலிருந்து ரூ.41.85 லட்சத் தை ஓன்- லைன் மூலமாகத் திருடியதாக கல்லூரி மாணவர் கைது செய்யப்பட்டார்.

சீனாவின் தென்மேற்று பகுதியில் உள்ள குய்ஜோவ் மாகாணத்தின் தலைநகா குயாங் கைச் சேர்ந்தவர் கல்லூரி மாணவர் சாங் செங்கிலிங்.

இவர் இந்த ஆண்டு தொடக்கத்தில் சீன தொழில் மற்றும் வர்த்தக வங்கியில் போலி அடையாள அட்டையைக் காண்பித்து கணக் கைத் தொடங்கியுள்ளார்.

பின்னர் சீனாவின் வடகிழக்கே உள்ள ஹார்பின் நகரில் உள்ள இன்டர்நெட் மையத் திலிருந்து வங்கியின் அதே வங்கியில் கணக்கை வைக்கிருக்கும் 158 பேருடைய கணக்கை ஒன்-லைன் ஊடாகபார்த்துள்ளார்.

அதை பின்னர் தனது கல்லூரி நண்பரிடம் கூறியுள்ளார். பின்னர் இருவம் இணைந்து அக்கணக்குகளில் இருந்த பணத்தை தங்களுடைய கணக்குக்கு மாற்றிக்கொண் டுள்ளனர். மேலும் இரண்டு நண்பர்களிடம் இதே சாங் கூறியுள்ளார்.

நால்வரும் சேர்ந்து மொத்தம் ரூ.41.85 லட்சத்தை வங்கியின் ஆன்-லைன் மூல மாகத் திருடியுள்ளனர்.

இதில் ஒரு பகுதியை சாங் எடுத்துக் கொண்ட சாம் மித முள்ளதை மற்ற மூவ ரும் பகிர்ந்து கொண்டனர். இவ்விடயம் பொலி ஸாரக்கு தெரியவந்ததையடுத்து தற்போது சாங் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றவர் களைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (ப)

# தமிழ் இலக்கியப் பெருவிழா ஆரம்ப நிகழ்வுக் காட்சிகள்



யாழ்.இந்து மகளிர் கல்லூரி வாயிலில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான சிகரம்




தட்டாதெருச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவு






யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற தமிழ் இலக்கிய பெருவிழா 2004இல் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையுரையாற்றுவதையும் கலாநிதி க.ரகுவரன், ஈஸ்வரநாதபிள்ளை குமரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும், கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களையும் படங்களில் காணலாம். *படங்கள் - சிவசங்கர்*







# ஈழத்தில் மேனாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவிலக்கிய பாரம்பரியம்

## முதல்நாள் ஆய்வரங்கில் கலாநிதி க.ரகுவரன்

"வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவின் முதல்நாள் நிகழ்வில் 'மேனாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவியல் பாரம்பரியம்' என்ற தலைப்பில் கலாநிதி க.ரகுபரன் ஆற்றிய ஆய்வுரையின் தொகுப்பு இங்கே பிரசுரமாகிறது..."



ஈழத்தின் கல்வி அறிவியல்கள் எழுத்துக்களைக் கருப்பொருளாகக் கொண்ட இக் கருத்தரங்கில ஈழதது தமிழிலக்கிய வரலாற்றில் இடையீடு எதுவும் அற்றதான தொடர்ச்சியான வரலாற்றின் முதலாவது காலக்கட்டமாகக் கொள்ளப்படுகின்ற ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் (ஏறக்குறைய கி.பி 1300 - 1600) தோன்றிய கல்விசார் அறிவிலக்கிய பாரம்பரியத்தை நோக்குவதாக இக்கட்டுரை அமைகிறது. மேனாட்டாா வருகைக்கு முந்தியதான இக்காலகட்டத்துத் தமிழிழக்கிய நூல்களின் பொது மரபு பெரும்பாலும் கல்விசார் அறிவியற் பாரம்பரியத்திற்கே முதன்மை கொடுப்பதாக அமைதல் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த அம்சமே ஈழத்து இலக்கியப் போக்கினை சமகால தமழக இலக்கியப் போக்கிலிருநது தனிததுக் காட்டுவதாகவும் அமைகின்றது. அது மட்டுமன்றி பிற்காலத்திலும் கல்விசார் அறிவிலக்கியத் தொடர்ச்சியொன்று ஈழத்தில் நிலைபெறுவதற்கு அடித்தளம் இடுவதாகவும் அமைகின்றது.

கல்விசார் அறிவிலக்கியங்கள் எனும்போது இலக்கியத்துறை அல்லாத கணிதம், சோதிடம், வைத்தியம், சிற்பம், கட்டடம் என்பன சார்ந்த விதி விளக்க நூல்களும், வரலாறு சார்ந்த விவரண நூல்களும் இவை போன்ற பிறவுமே கருதப்படுவன. மொழி பற்றிய விவரணங்களை,. விதிகளைக் கூறுவனவான இலக்கண நூல்களும் இததொகுதியுள் அடக்கப்பட வேண்டியனவே. ஆயினும் இலக்கணம் பெரும்பாலும் இலக்கியக் கல்வியோடு தொடர்புறுத்தியே பயிலப்படுவதால் அதனை கல்விசார் அறிவியல் நூல் வகைக்குள் அடக்கி நோக்கும் போக்கு இல்லாமற் போய்விட்டது. இலக்கணம் போலவே நிகண்டு முதலாயினவும் கல்விசார் அறிவிலக்கியங்களாகக் கொள்ளப்பட வேண்டியனவே.

ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட ஈழத்து நூல்களை நோக்கும்போது மேல் வருவன அத்தகு கலவிசார் அறிவிலக்கியங்களாக கொள்ளத்தக்கன எனலாம்.

சரசோதி மாலை(சோதிடம்), செகராச சேகர மாலை(சோதிடம்), செகராச சேகரம் (வைத்தியம்),பரராசசேகரம் (வைத்தியம்), சைவபாடநூல் (வரலாறு), கோணேசர் கல்வெட்டு (வரலாறு), கைலாயமாலை (வரலாறு).

இவை தவிர வையாபாடலின் ஆசிரியரால் எழுதப்பட்ட பரராசசேகரன் ராச முறை என்ற வரலாறு சார்பான நூலொன்றும் விளக்கியதாக அறியவருகின்றது.

இக்காலத்தில் ஏனைய இலக்கியங்களாக அறியப்படுவன இவை:

இரகுவம்சம், திருக்கரசை புராணம், கதிரைமலை புராணம், தஷிணகைலாச புராணம், கோவலனார் கதை, சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை, பரராசசேகரன் உலா (இன்று இல்லை)

இவற்றுள் புராணங்களாக அமைபவை ஓரளவில் வரலாற்றுச் செய்திகளை உட்கொண்டு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஈழத்தவர்கள் மொழிபெயர்ப்புக்குத் தேர்ந்தெடுத்த காவியமான இரகுவம்சம் கூட ஒருவகையில் குலமரபு கிளாத்துவதாக அமைந்திருக்கின்றமைக்கும அக்கால ஈழதது இலக்கியப் போக்குக்கும் இடையில் தருக்கரீதியான இயைபேதும் இருந்திருத்தல் சாத்தியமே.

இக்காலத்தில் எதிர்பார்க்கப்படுவது போன்ற விஞ்ஞான ரீதியான பார்வையை உடையனவாக அக்கால நூல்களை முக்கியமாக வரலாற்றியல் சார்பான நூல்களை எதிர்ப்பார்க்க முடியாது எனினும அக்காலத்தில் அவை அறிவியல் நோக்குடனேயே எழுதப்பட்டன என்பதை இவ்விடத்தில் வலியுறுத்தல் முக்கியமானதாகும். அது போலவே இத்தகு நூல்களை இலக்கியம் என்று சுட்டுவது தொடர்பாக நிலவும் முரண்பாடான கருத்துக்கள் பற்றிச் சிந்திப்பதும் இவ்விடத்துக்குப் பொருத்தமானதே.

சோதிடம், வைத்தியம், வரலாறு முதலான தொடர்பான இத்தகு நூல்களை இலக்கியம் என்ற பெயராற் சுட்டலாமா என்ற ஐயப்பாடு ஒன்று புலமையுலகில் உண்டு. எழுதப்பட்டவை யாவற்றையும் **Literature** என வழங்கும் மரபு ஆங்கிலத்தில் உண்டு. தமிழைப் பொறுத்தவரையில் அத்தகையதொரு மரபுண்டா என்பது சிந்திக்கத்தக்கதே. இது தொடர்பாகக் கைலாசபதி கூறுவதாவது:

இலக்கியம் என்று தற்காலத்திலே நாம் குறிப்பிடும் போது சிருஷ்டி இலக்கியம் அதாவது கவிதை, புனைகதை, நாடகம், திறனாய்வு முதலான ஆற்றல் இலக்கியப் பிரிவுகளையே கருதுகிறோம். ஆயினும் இது மிகச் சமீபகாலத்தில் ஏற்பட்ட வழக்காற்றில் ஒன்றாகும். பொதுவாக இலக்கியம் என்று முற்காலத்தில் குறிப பிடடோர் சிருஷ்டி இலக்கியத்தை மாத்திரமன்றிச் சமயம், தத்துவம், சாஸ்திரம், அறிவியல் முதலிய துறைகளைச் சார்ந்த நூல்களை கருத்தில் கொண்டனர். ஆதிகாலத்திலே வாய்மொழிப் பாடல்கள் வழங்கிய பொழுது வாகட நூலிலிருந்து வம்ச வரலாறு வரையில் செய்யுள் வடிவிலேயே அமைந்து நிலவியது என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. இவையனைத்தும் செய்யுள் என்றே கருதப்பட்டன.

உதாரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து அரசாண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலப பிரிவிலே எழுந்த பல செய்யுள் நூல்கள் வைத்தியம், சோதிடம், சிறபம், வம்ச வரலாறு முதலானவற்றை பாடற் பொருளாகக் கொண்டிருத்தலைக் காணலாம்.

(தொடரும்...)

# செய்தித் துளிகள்

## முஸ்லிம்காங்கிரஸ் மாநாடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் இன்று யாழ்ப்பாணத்தில் நடாத்தத் திட்டமிட்டிருந்த யாழ்.மாவட்ட மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர் கருத்துத் தெரிவிக்கும் போது,

தமிழ்-முஸ்லிம் உறவைப் பலப்படுத்தல் எனும் தலைப்பில் நடாத்தத் திடடமிட்டிருந்த யாழ். மாவட்ட மாநாட்டினை, தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியின் 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு தினததினை முன்னிட்டு ஒத்திவைத்துள்ளோம்.

இம் மாநாட்டினை எமது கட்சி முஸ்லிம்களின் நோன்புப் பெருநாள் முடிந்ததன் பின்னர் நடாத்தவுள்ளதாகவும், இம் மாநாட்டின் வெற்றிக்கு விடுதலைப்புலிகள் வேண்டிய ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார். (த-16)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோயில் சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ற)

## நிறைவு விழா

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அமைக்கப் பட்டுள்ள மெதடிஸ்த திருச்சபையின் பிரார்த்தனை மண்டபத்தின் 9ஆம் வருட நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை 4.00 மணிக்கு அருட்திரு டி.அழகராசா சேகரக்குரு தலைமையில் நடைபெறும்.

இதில் விஷேட ஆராதனைகளும் இடம்பெறும் (ப)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள நவராத்திரி பூசையை முன்னிட்டு சரஸ்வதி தேவியின் மூவர்ணப் படங்களையும் விஜயதசமியன்று ஏடு தொடக்கவுள்ள சகல பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் இந்து இளைஞர் மன்றங்கள் ஆகியவற்றுக்கு பனை ஓலை ஏடுகளையும கே.கே.எஸ். வீதியிலுள்ள மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தில அன்பளிப்பாகப் பெற்றுக கொள்ளலாமெனத் தொழிலதிபர் சிவநேயர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார். (ற)

## அரிசி,பருப்பு,சீனியின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

அரிசி, பருப்பு, சீனி ஆகியவற்றின விலைகளை உடனடியாகக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்ற மேற்படி பொருட்களுக்கான இறக்குமதி தீர்வை வரி நீக்கப்பட்டதனால் பருப்பு 7ரூபாவாலும்,சீனி 5ரூபாவாலும் விலை குறைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் நாட்டரிசி 28.50 ரூபாவாலும சிவப்பு நாடு 28.50ரூபாவாகவும் பொன்னி சம்பா அரிசி 35 ரூபாவாகவும் கொழும்பில் விற்கப்படுகின்றது. (த)

## பொருட்களைத் தவறவிட்டோர் கவனத்திற்கு!

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற் சவங்களில் பக்த அடியார்களால் தவறவிடப்பட்ட மணிக்கூடுகள், பணப்பைகள், தங்க நகைகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எனவே, உரியவர்கள் அவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாமென பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். வசந்தகுமார் அறிவித்துள்ளார். (ற-52)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் இளஞ்சை வப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேர்வுகளுக்குத் தோற்ற விரும்புவோர் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி, தேர்வு அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில் நடைபெறுமென தேர்வுச் செயலர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (ற)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

2005ஆம் கல்வியாண்டுக்காகத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக யாழ். தொழில்நுட்பக் கல்லூரியால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொறியியற்துறை, வர்த்தகத் துறை மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரிகளின் தகமைகளுக்கும், திறமைகளுக்கும் அமைய கற்கை நெறிகளுக்குத் தேவையான எண்ணிகைகளுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்ப முடிவுத திகதி அடுத்த மாதம் 5ஆம் திகதி ஆகும். மேலதிக விபரங்களை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பார்வையிடலாம். (ற-5)

## உதவு பொருட்கள் விநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அகதிகள் முகாம்களில் உள்ள மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் உணவு அல்லாத வீட்டுப் பாவனைப் பொருட்களை வழங்கி வருகிறது.

கற்கோவளம் புனிதநகர் சுப்பர் மடம் சக்கோட்டை, வியாபாரிமூலை, பொலிகண்டி கிழக்கு ஆகிய இடங்களிலுள்ள 10 முகாம்களைச சேர்ந்த 604 குடும்பங்களுக்கு உணவு அல்லாத வீட்டுப் பாவனைப் பொருட்களை வழங்கியுள்ளது.(ப-35)

## *திரையரங்குக்கு விஷமிகள் தீ வைப்பு*

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் வீதியிலுள்ள கஜன் திரையரங்கு கடந்த வியாழக்கிழமை இரவு சில விஷமிகளால் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டுள்ளது.

இதனால், திரையரங்கினுள் இருந்த கதிரைகள் பல எரிந்து நாசமாகியுள்ளன. இச்சம்பவத்தில சுமார் 50ஆயிரம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## பொது மண்டபம்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள திக்கம் கிராமத்திற்கு கிராம அபிவிருத்தி மண்டபம் அமைப்பதற்கு நிக்கொட் நிதியுதவி செய்துள்ளது.

அந்தவகையில் 7இலட்சம் ரூபாவினை நிக்கொட் நிறுவனம் ஒதுக்கியுள்ளது. (ப-35)

## கடலுணவு பதனிடும்நிலையம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு தாளையடியில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 20இலட்சம் ரூபா செலவில கடலுணவு பதனிடும் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இக் கடலுணவு பதனிடும் நிலையம் மருதங்கேணி-தாளையடி வீதியில் இயங்கும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்குச் சொந்தமான காணியில் அமைக்கப்படவுள்ளது. (ப-35)

## உப அலுவலகம் செயற்படவுள்ளது

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு அம்பன் குடத்தனை பொற்பதி மணற்காடு பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் உப அலுவகம் ஒன்று பிரதி வியாழக்கிழமைகளில் குடத்தனையில் இயங்கவுள்ளது.

இதுவரை காலமும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முகமாலை ஊடாக மருதங்கேணி சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர்.

இதனால் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும் கவனத்தில் கொண்டு இவ் உப அலுவலகம் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

## ஞானச் சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஆத்மீக சஞ்சிகையான ஞானச்சுடரின் ஐப்பசி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ற)

## மது ஒழிப்பு . வாரம் பிரகடனம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சட்டவிரோத மது ஒழிப்புக் குழுவினால் எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் 16ஆம திகதி வரை சட்டவிரோத மது ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் "அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இது குறித்து துண்டுப்பிரசுரங்களையும் வழங்கி வருகின்றனர். (ற-126)

## *2 ஆம் லெப். மாலதியின் 17ஆவது நினைவுநிகழ்வு*

(திருநெல்வேலி)

2ஆம் லெப்ரினன்ட் மாலதியின 17ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நாளை கோப்பாய் வெளிப் பகுதியில் 2ஆம் லெப்ரினன்ட் மாலதி வீரச்சாவடைந்த இடத்தில் கட்டப் பட்டுள்ள நினைவுத் தூபியில் பிப 4.00 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று அதன்பின்கோப்பாய் சிவன் ஆலயத்திற்கு அருகில் பொதுக்கூட்டமும்இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-43)

## *நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடல்*

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தின் அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத்தினால் வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சகல வர்த்தக நிலையங்களிலுள்ள நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடப்படவுள்ளன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் அனைத்து வர்த்தக நிலையங்களிலுமுள்ள நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு எதிர்வரும் 14,15,18, 19ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல்பிப 1.30 மணி வரை வலி. வடகது பிரதேச சபை, உப - அலுவலகத்தில் வைத்து முத்திரையிடப்படவுள்ளன. (ற)

## கருத்தாடல் நிகழ்வு

(திருநெல்வேலி)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் ஜேர்மன் தொழிலநுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.குடாநாட்டில யுத்தத்தால் பாதிப்படைந்தவர்களின் வாழ்வில் மறுவாழ்வை ஏற்படுத்துவது தொடர்பான கருத்தாடல்நிகழ்வு ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாணசபை பிரதிநிதிகள்,யாழ் அரச அதிபர் மற்றும்பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-43)

## பொது நிர்வாக மறுசீரமைப்புப் பணிகள்

## மிகவும் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன

### ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொது நிர்வாகத் துறையை மறுசீரமைக்கப்பட வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகைளில், பொது நிர்வாகத் துறையை மறுசீரமைப்பதற்காக பல நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனாலும் நடவடிக்கைகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருக்கின்றன.

அபிவிருத்திப் புனர் நிர்மாண நடவடிக்கைகள் இம் மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் வீதிகள், சுகாதாரம், மின்சாரம், நீர்ப்பாசனம், சமுர்த்தி மற்றும கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் மறுசீரமைக்கப்படவுள்ளன.

இந்த மறுசீரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த மறுசீரமைப்புத் திட்டத்துக்கு அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் பூரண ஆதரவு நல்க வேண்டும் மக்களுக்குச் சேவை வழங்குவதிலும் அவர்களது அபிலாஷைகளைப்பூர்த்தி செய்வதிலும் அரச ஊழியாகளுக்குப் பாரிய பொறுப்பு உண்டு எனவும் தெரிவித்தார். (ற-8)

## கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக கசிப்பு தயாரித்தமை, 2 ஆயிரத்து 152 ராமஸ் கோடாவை தனது உடமையில் வைத்திருந்தமை, 120 ராமஸ் கசிப்பு தயாரித்தமை, சட்ட விரோதமாக கசிப்பு தயாரிப்பதற்கான உபகரணங்களை உடமையில் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுடன் தொடர்புடைய உரும்பிராயைச் சேர்ந்த நபரொருவருக் யாழ். மாவட்ட நீதி மன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பிரஸ்தாப நபரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட நீதி மன்றத்தில் நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இதனை விசாரித்த நீதிபதி, ஒரு குற்றத்திற்கு 10 ஆயிரம்ரூபா நானகு குற்றங்களுக்கும் 40 ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மேலும், 10 ஆயிரம் ரூபாவைத் தர்மப் பணமாகப் பெற்று இருபாலை கானான் சிறுவர் இல்லத்துக்கும் வழங்கப்பட்டது. (ற-19)

## அன்பு மாணவர்களே!

### எதிர்வரும் 14.10.2004 அன்று

## நவராத்திரி பூசை

### ஆரம்பமாவதையொட்டி

## 'கவிதை மாலை'

பகுதியை வலம்புரி வெயிடவுள்ளது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம்பெறவேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை,கறகும் தரம், மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

**"வலம்புரி"**

**இல.15, வெள்ளாந்தெரு,**

**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:* கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம். (ஆ-ர்)

## விவாத அரங்கு - 6

விடயம்

**மதுமாற்றத் தடைச் சட்டம்**

**தேவையானதா?**

**தேவையற்றதா?**

நடுவர் : விதுரன்

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்**

*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் - குறள்

வலம்புரி

## விலை உயர்வைக் கட்டுப்படுத்த உற்பத்தி முயற்சி அவசியம்

நாட்டில் பொதுவிலை மட்டம் வேகமாக அதிகரித்துச் செல்கிறது. இதனால் வறுமைப்பட்ட மக்கள் நாளாந்த சீவனோபாயத்திற்கு திண்டாடும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

பௌத்தம், சிங்களம் என்ற மத இனவாதங்களுக்குள் சிக்குண்டு தமிழ் மக்கள் மீது போர் தொடுத்த சிங்கள ஆட்சியாளர்களின் அன்பளிப்பாக நாட்டின் பொதுவிலை மட்டம் மிக வேகமாக அதிகரித்துச் செல்கிறது.

யுத்த செலவு, படையினருக்கான சம்பளம் போன்றவையே அரச வரவு - செலவுத் திட்டத்தில் பெரும் பங்கைப் பிடித்துள்ளதால், உற்பத்தி சார்ந்த முதலீடுகளை மேற்கொள்ள அரசு தவறி விட்டது.

இதனால், வேலை வாய்ப்பு, உற்பத்திகள் கீழ் நோக்கி நகர, நாடு இப்போது அதள பாதாளத்திற்குள் சிக்கிவிட்டது. இஃது இலங்கை என்பதன் ஒட்டு மொத்தமான நிலைப்பாடு. ஆனால், வடபுலத்தைப் பொறுத்தவரை பயிர் செய்யும் நிலங்கள் நெல் வயல்கள் என்பன இராணுவத்தின் ஆக்கிர மிப்புக்குள் அகப்பட்டுள்ளதால் விவசாய உற்பத்திகள் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.

குறிப்பாக வலிகாமம் வடக்கு, தீவகம், தென்மராட்சி போன்ற பிரதேசங்களில் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்பட்ட நிலங்கள் இராணுவத்தின் கட் டுப்பாட்டுக்குள் இருப்பதால் அந்த நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத விவசாயிகள் வேலையற்றவர்களாக இருக்கின்றனர். இதேவேளை வடபுலத்தில் நடந்த யுத் தம் அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வு என்பன உற்பத்தி முயற்சிகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக குடிசைக் கைத்தொழிலாக இடம் பெற்ற பனைவளம் சார்ந்த முயற்சிகள் யாவும் அடியோடு கைவிடப்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பண்டம், பனை யோலைப்பாய் போன்ற உற்பத்திகள் இடம் பெயர்வு காரணமாக தடைப்பட்டுப் போனதால் அந்த இடத்தை இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கிய பண்டாங்களும், பிளாஸ்டிக் பண்டாங்களும் ஆக்கிரமித்துக் கொண்டன.

பனைவளம் சார்ந்த உற்பத்திகளை நாம் இழந்ததன் காரணமாக அந்த முயற்சியால் வருமானம் பெற்ற குடும்பங்கள் தொழிலிழக்கவேண்டியதாயிற்று.

இப்போது மீளக் குடியமர்ந்து பனைவள உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டாலும் அந்த உற்பத்திப் பண்டாங்களுக்கான நுகர்வோர் மிகக் குறைவடைந்து விட்டதால் அம் முயற்சிகளை முற்றாக கைவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வடபுலத்தில் ஏற்பட்ட யுத்தம், இடம் பெயர்வு, உற்பத்தி நிலங்களின் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களினால் விவசாயம், குடிசைக் கைத்தொழில்கள் வீழ்ச்சி கண்டுள்ளன.

இதன்காரணமாக அரசின் நிவாரணக் கொடுப்பனவுகளை மட்டும் நம்பி வாழும் குடும்பங்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபட விரும்பம் இன்றி வீணே காலத்தை கழிக்கின்றன.

வடபுலத்தைப் பொறுத்தவரை மக்கள் வாழும் இடங்களில் வளமுள்ள நிலங்கள் வானம் பார்த்த பூமியாக காட்சி தருகின்றன. இவ்வாறு வெறும் தரிசு நிலங்களாக கிடக்கும் வளங்களை உற் பத்தி முயற்சிக்குப் பயன்படுத்த மக்கள் முன்வரா விட்டால், பொதுவிலை மட்டத்தின் அதிகரிப்பை தடுத்து நிறுத்துவது முடியாத காரியம் ஆகும்.

எனவே நாளுக்கு நாள் நாட்டில் ஏற்பட்டு வரும் விலை உயர்வை பிரதேச ரீதியில் குறைக்க நட வடிக்கை எடுப்பது அவசியம் ஆகும்.

வடபுலத்து மக்கள் தங்களின் வளம் நிறைந்த நிலங்களை வீணடிக்காமல் அதனை உற்பத்தி வளங்களாக மாற்றினால் உற்பத்திகளின் நிரம்பல் அதிகரித்து அதன் மூலம் விலைக் குறைப்பை ஏற்படுத்த முடியும்.

# திருமலைத் துறைமுகத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட முகாம்களை அகற்றவோ பின்னகர்த்தவோ முடியாது

## திருமலை பிராந்திய கடற்புலித் தளபதி தெரிவிப்பு

(திருகோணமலை)

**திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தம்மால் அமைக்கப்பட்ட முகாம்களை அகற்றவோ, பின்னகர்த்தவோ முடியாது என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலைப் பிராந்தியக் கடற்புலிகளின் தாக்குதல் கட்டளைத் தளபதி வினாயகம் தெரிவித்துள்ளார்.**

கடற்புலிகளின் "அலைபாயுதே"ஒளிப்பேழை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் போர் நடைபெற்ற காலப்பகுதியை விட போர் நிறுத்தக் காலப் பகுதியிலேயே படையினர் அதிகளவிலான ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளனர்.

வெளிநாட்டு இராணுவ நிபுணர்களிடமும் பயிற்சிகளை பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர் பயிற்சியும் பெற்றுள்ளனர்.

எனவே திருகோணமலைத் துறைமுகத்தை மீட்டு எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க கடற்புலிகள் தயாராக உள்ளனர். தலைவர் வே. பிரபாகரன் தனது 50 ஆவது அகவை முடிவதையிட்டு கடற்புலிகளின் படையணியைக் கட்டியெழுப்புவதற்குப் பெருமளவு நிதியினை ஒதுக்கியுள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

(ந-க-8)

# புத்தளத்திலுள்ள இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு நிவாரணம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்குக!

## ரிஷாத் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை

(புத்தளம்)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம், குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தைக் தாமதிக்காது உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கேட்டுள்ளார்.

கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களில் பல இன்னல்களை அனுபவித்து வரும் நிலையிலும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் கடந்த மூன்று மாத காலமாக இது வரையில் வழங்கப்படவில்லை. இது மக்களைப் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாக்கியுள்ளது.

நோன்பு காலம் ஆரம்பமாக இருக்கும் இந்த நேரத்தில் மக்களை வருத்தும் வகையில் செயற்படாமல் அவர்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை உடன் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என ரிஷாத் பதியுதீன் கேட்டுள்ளார்.

நிவாரண, மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளரினால் இந்த நிவாரண நடைமுறையில் 30 சதவீதம் குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்தப்பட்டிருப்பதானது மக்கள் மத்தியில் பெரிதும் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக் குறைப்பை அமைச்சு அமுல்படுத்தும் பட்சத்தில் மக்களை ஒன்று சேர்த்துப் போராட்டங்களை நடத்த நேரிடும் எனவும் ரிஷாத் பதியுதீன் மேலும் தெரிவித்தார்.

(ந-15)

## வட மாகாண ரீதியில் நடைபெற்ற அஞ்சல் தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உலக அஞ்சல் தினத்தையொட்டி வடமாகாண ரீதியாக அண்மையில் நடாத்தப்பட்ட அஞ்சல் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றோரின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றோரின் பெயர் விபரம் வருமாறு

சிறந்த அஞ்சல் சேவை உத்தியோகத்தர்

**முதலாம் வகுப்பு**

1ஆம் இடம் - க-பாரதிதாசன் -யா/சுண்டுக்குளி அஞ்சலகம்

2ஆம் இடம் - அ.அ.சிறில் -ம/மன்னார்அஞ்சலகம்

3 ஆம் இடம்-வெ.அந்தோனிப்பிள்ளை –யா/மானிப்பாய் அஞ்சலகம்

**இரண்டாம் வகுப்பு**

1 ஆம் இடம் -வி.து செபஸ்ரினா-ம/மன்னார் அஞ்சலகம்

2ஆம் இடம் - இ.லூ.தி.சறோஜினி-ம/மன்னார் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம்

3 ஆம் இடம் -க.ரவீந்திரராஜ்-ம/மடுக்கோவில் அஞ்சலகம்

**சிறந்த உப அஞ்சலதிபர்**

1 ஆம் இடம் -ஆ.எ.இ.ஜோச் -ம/பள்ளிமுனை உப அஞ்சலகம்

2 ஆம் .இடம் -ந.தாரணி-யா/புத்தூர் உப அஞ்சலகம்

3 ஆம் இடம்-இ.ஸ்ரீஸ்கந்தராம்-யா/புன்னாலைக் கட்டுவன் வட. உப. அஞ்சலகம்

**சிறந்த அஞ்சலகம்**

1 ஆம் இடம் - ச.தேவதாசன் -யா/ஊர்காவற்றுறை அஞ்சலகம்

2 ஆம் இடம் -மா.உதயகுமார்-யா/புத்தூர் உப அஞ்சலகம

3 ஆம்இடம் -இ.இராஜகுணபாலன் -ம/மடுக்கோவில் அஞ்சலகம்

**சிறந்த கோலவுடைப் பணியாளர்** (அஞ்சலாளர் தவிர்ந்தோர்)

1 ஆம் இடம் - கா.மு.சிவகுருநாதன் -யா/பருத்தித் துறை அஞ்சலகம்

2 ஆம் இடம்-தா.சி.சிவகுமார்-யா/பருத்தித்துறை அஞ்சலகம்

3 ஆம் இடம் -லூ.லெ.அந்தோனிப்பிள்ளை-ம/மன்னார் அஞ்சலகம்

**தேசிய ரீதியில் தெரிவானோர்**

ச.தேவதாசன -யா/ஊர்காவற்றுறை அஞ்சலகம்

ஆ.எ.இ.ஜோச் - ம/பள்ளிமுனை உப அஞ்சலகம்

வி.து.செபஸ்ரினா-ம/மன்னார் அஞ்சலகம்

(ந-5)

## தமிழ் இலக்கிய பெருவிழா இன்றைய நிகழ்வுகளில்....

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சு நடாத்தும் தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அரங்கில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை ஆய்வரங்கு நடைபெறும்.

மாலை நிகழ்வுகள் 5 மணிக்கு வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். மோகனதாஸும், சிறப்பு விருந்தினர்களாக கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, நுண்கலைப் பீட தலைவர் பேராசிரியர் சி. மௌனகுரு, கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜனாப் எம். கே. எம். ஹனிபா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மரபுரீதியான ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து 'ஈழத்து மரபு வழித் தமிழ் புலமையாளர்கள்', 'புதுத்துளிர் நூறு' ஆகிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்படும்.

தொடர்ந்து, "வாலாயமான கவிதை வழங்கு" என்னும் தலைப்பில் கவியரங்கம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இசை விரிவுரையாளர் சங்கீத பூஷணம் குமாரசாமியின் இசை அரங்கம் ஆகியவை இடம்பெறும்.

இவற்றையடுத்து, திருமதி சாந்தினி சிவநேசனின் கொக்குவில் கலாபவனம் வழங்கும் நாட்டிய நிகழ்ச்சி, கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களும், கன்னங்குடா மரபுவழிக்கூத்துக் கலைஞர்களும் வழங்கும் கூத்துலயும், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் வழங்கும் 'குருபக்தி' எனும் தலைப்பிலான தாளலயக்கதை ஆகிய நிகழ்வுகளும் இறுதியாக வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினர் வழங்கும் "அடல் செறி வீமனும், விராட நாட்டுக் காமுகனும்" என்ற தலைப்பிலான வடமோடிக் கூத்தும் இடம்பெறும். பின்னர் தமிழ்மொழி வாழ்த்துடன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவுறும். (ந-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**நீதி நூல்கள் எப்போதும் நான் அல்ல. நீயே என்று சொல்கின்றன. அவற்றின் இலட்சியம், சுயநலம் அல்ல சுய நலமின்மை என்பதே ஆகும். சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிரக் கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை**

சுவாமி விவேகானந்தர்



நேற்று மாலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற தமிழ் இலக்கியப் பெருவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அரச அதிபர் செ.பத்மநாதன், சிறப்பு விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதையும், அரச அதிபர் மங்கள விளக்கேற்றுவதையும், தமிழர் பண்பாட்டிற்கு அமைய மகளிர் மங்கள வாத்தியங்கள் இசைப்பதையும் படங்களில் காணலாம். படங்கள்: அலுவலக நிரு[illegible]

# தமிழ் இலக்கியப் பெருவிழா நேற்று ஆரம்பமானது

வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவலகள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு நடாத்தும் தமிழ் இலக்கியப் பெருவிழா யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது.

தமிழ் இலக்கிய ஆரம்ப விழாவிற்கு வருகைதந்த பிரமுகர்கள் கல்லூரி வாயிலில் இருந்து ஊர்வலமாக மண்டபத்திற்குள் அழைத்துச்செல்லப்பட்டனர்.

கல்லூரி அதிபரின் உரையைத் தொடர்ந்து புத்தகக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சி.மௌனகுரு தலைமையில் 'ஈழத்தின் கல்வி அறிவியல்சார் எழுத்துக்கள் வரலாற்று விமர்சன நோக்கு' என்ற தலைப்பில் ஆய்வரங்கு நடைபெற்றது.

இவ் ஆய்வரங்கில் 'மேல்நாட்டவர் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவிலக்கிய பாரம்பரியம்' எனும் கருப்பொருளில் கலாநிதி ரகுவரனும் 'போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் கல்விசார் அறிவியல்சார் நூல்கள்' எனும் கருப்பொருளில் ஈஸ்வரநாதபிள்ளை குமரனும் உரையாற்றினர்.

'பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மிசனறிகளின் செயற்பாடு' எனும் கருப்பொருளில் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அனுப்பிய கட்டுரையும் அங்கு வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியாக கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இன்றும், நாளையும் நிகழ்வுகள் தொடரவுள்ளன. (து-05)

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் முயற்சியில்

# சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மிக்கெலின் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள சுவிஸ்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் மிக்கெலின் கல்மிரே அம்மையார் நேற்று வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தேக்கநிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசு மீண்டும் ஆரம்பிப்பதற்கான அவசியத்தை வலியுறுத்துவதற்கு தனது நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இரவு இலங்கை வந்திருந்தார்.

இலங்கை வந்திருந்தஅவர், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை நேற்று மாலை சந்தித்து இருதரப்பு வர்த்தக உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் பேச்சு நடத்தியுள்ளார்.

இன்று காலை எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும், அதன்பின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (ம)

# உணவுப் பொருட்களின் விலை குறைப்பு; அரசை பாராட்டுகிறார் ஐ.தே.க. எம்.பி.

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருட்கள் மீதான இறக்குமதி வரியை அரசாங்கம் நீக்கி மக்களுக்கு நிவாரணம் அளித்தமையை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த கருணதிலக பாராட்டி கருத்துத் தெரிவித்துள்ளார்.

எரிபொருட்கள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து விஷம்போல் ஏறிய வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்துவதற்கு அரிசி, சீனி, பருப்பு ஆகியவற்றின் இறக்குமதி வரியை நீக்கியமை பாராட்டுக்குரிய விடயமாகும் என்று அவர் கூறியுள்ளார்.

உணவுப் பொருட்களின் விலைகளை குறைத்து வாழ்க்கைச் செலவினைக் குறைப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பை குறைக்க முற்பட்டமை பாராட்டத்தக்கது. அதேபோன்று எரிபொருட்களின் விலைகளையும் அரசு குறைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (ம)

# கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் மாபெரும் இருநாள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்கள், யாழ்.மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தும் மாபெரும் இருநாள் கண்காட்சி கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் காலை 9.30 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

வடக்குகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள முதல்நாள் நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்பு விருந்தினராகவும், வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ்ப்பாணம் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் சிறப்பு விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் க.சின்னத்தம்பி மற்றும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

# புத்தளத்தில் பொலிஸார் மீது குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூடு

## பொலிஸாரின் பதில் தாக்குதலில் குடும்பஸ்தர் பலி

(புத்தளம்)

சட்டவிரோத மதுபான உற்பத்தியுடன் தொடர்புடைய நபர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் நித்தணிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருபிள்ளையின் தந்தையான விஜயபால (வயது38) என்பவரே உயிரிழந்தவராவர்.

மேற்படி பகுதியில் அண்மைக்காலமாக சட்டவிரோத மதுபான உற்பத்திச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்ததையடுத்து நேற்றையதினம் காலை புத்தளம் பொலிஸார் திடீர் சோதனை நடத்தினர்.

இதன்போது பிரஸ்தாப நபர் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை பிரஸ்தாப நபருடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களின் பேரில் புத்தளம் பொலிஸில் பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஆர்.எம்.கே.ரத்னாயக்க தெரிவித்துள்ளார். (ற-15)

### தமிழீழ...

பட பலரின் உரைகள் இடம்பெறவுள்ளன.

இதனையடுத்து சோதியா படையணி, தமிழீழ இசைக்குழு மற்றும் மகளிர் படையணிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த-121)

### இளைஞர்...

சம்பவத்தையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர். இதேவேளை பிரஸ்தாப் நபர்கள் பொலிஸாரைத் தாக்கிவிட்டு மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு தப்பியோடினர். கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. (த-8-121)

### சமாதான...

ளார்.

இதேவேளை அமைச்சர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டுவரும் எரிபொருள் கொடுப்பனவை 90 ஆயிரம் ரூபாவில் இருந்து 54 ஆயிரமாகக் குறைக்கும்படியும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இவ் உத்தரவு சுற்று நிருபம் மூலம் சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம)

### புலி உறுப்பினரை...

கொலையாளிகளுக்கு இராணுவத்தின் உதவியிருப்பது தெளிவாகின்றது.

இத்தகைய நிலைமை நீடிக்குமானால் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென குயிலின்பன் மேலும் எச்சரித்தார். (த-121)

### ஆஸ்திரிய...

இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவும், நீண்டகால யுத்தத்தின் பின்னரான சூழ்நிலையில் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் விடுதலைப் புலிகள் அக்கறையுடன் செயல்படவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துவெளியிட்ட தமிழ்ச்செல்வன், சமாதான முயற்சிகள் தொடர்பான கடந்தகால பெறுபேறுகள், சமாதானத்தின் பலாபலன்கள் மக்களைச் சென்றடைவதில் ஏற்பட்டுள்ள தாமதம், சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு என்பனவற்றை எடுத்து விளக்கினார்.

மக்களின் மனங்களில் விரக்தி தோன்றியுள்ள நிலையில் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். (த-08)

### அரசின் மாற்று...

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்டக்குழு ஐரோப்பிய நாடுகளில் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றது.

இந் நிலையில் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் நோக்குடன் சுவிஸ்லாந்து வெளியுறவு அமைச்சர் மிக்கெலின் கல்மிரே அம்மையார் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## இதய அஞ்சலி

புதிய ஜனநாயக கட்சியின் அரசியல்குழு உறுப்பினரும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராளியும் தன்னலமற்ற சமூக சேவையாளருமான

## சின்னத்துரை - நவரத்தினம்

அவர்கள் காலமாகி விட்டார். அவருக்கு எமது கட்சியின் புரட்சிகர இதய அஞ்சலியைச் செலுத்துவதுடன் 10.10.2004 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பற்பகல் 3.00 மணிக்கு கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தோழர்கள், நண்பர்கள், உறவினர்களை வேண்டிக்கொள்கிறோம்.

**புதிய ஜனநாயக கட்சி**

(8886)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.